வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ఈళనాడు



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 20.06.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 193 | பக்கங்கள் : 16

# ஐ. நா. பரிந்துரையை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும்

## மனித உரிமைகள் ஆணையர் வலியுறுத்து

ஜெனிவா, ஜூன் 20

**இலங்கை தொடர்பாக ஐ. நா. மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றிய பொறுப்புக்கூறல் தீர்மானங்களை அரசாங்கம் நிராகரித்தமை கவலைக்குரியது - இந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் வலியுறுத்தியுள்ளார்.**




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய ஐ. நா. மனித உரிமைகள் ஆணையர் இலங்கை தொடர்பில் பேரவையின் நிலைப்பாட்டை நேற்றைய தனது உரையில் கோடிகாட்டினார். இதனிடையே, நாளை புதன்கிழமை இலங்கை குறித்து வாய்மூல அறிக்கையை அவர் சமர்ப்பிக்கவுள்ள நிலையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பொறுப்புக் கூறல் தொடர்பான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் வருந்தத்தக்க வகையில் நிராகரித்துள்ளது. எனினும், இலங்கை தொடர்ந்து எம்முடன் செயல்பட்டு வருகின்றது.

கடந்த 10 ஆண்டுகளில் இலங்கைக்கு சென்ற மனித உரிமைகள் பேரவையின் அதிகாரிகள் அங்கு மேற்கொள்ள வேண்டிய செயல் திட்டங்கள் குறித்து பல பரிந்துரைகளை செய்துள்ளனர். அவற்றை இலங்கை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றும் வலியுறுத்தினார். (ஐ)

# நயினை அம்மனுக்கு நேற்று கொடியேற்றம்

## பல்லாயிரம் பக்தர்கள் பங்கேற்பு



யாழ்ப்பாணம், ஜூன் 20

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

காலை விசேட பூசைகளை தொடர்ந்து வசந்த மண்டப பூசை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பக்தர்களின் அரோகரா ஒலி விண்ணைப் பிளக்க கொடியேற்றத் திருவிழா நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து நாகபூசணி அம்மன், பிள்ளை யார், முருகப் பெருமான் சகிதம் வீதி வலம் வந்து பக்தர் களுக்கு அருள் பாலித்தார்.

15

## நோயாளர்கள் உயிரிழப்பு:

# இந்திய மருந்துகளின் தரத்தை மீள்பரிசீலனை செய்ய திட்டம்!

கொழும்பு, ஜூன் 20

இந்தியாவின் கடன் உதவியில் கொள்வனவு செய்யப்பட்ட இரு வகை மருந்துகளை உட்கொண்ட நோயாளர்கள் உயிரிழந்தமை மற்றும் பக்கவிளைவுகளை எதிர்கொண்டுள்ளனர். எனவே அந்த இரு வகை மருந்துகளின் தரம் தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சிறீ சந்திரகுப்த தெரிவிக்கையில்,

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இரு வகையான மருந்துகளும் இந்திய கடனுதவியின் கீழ் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டவை. இவை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டு இந்த

15

# 29ஆம் திகதி ஹஜ் பெருநாள்

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் துல் ஹஜ் மாதத்துக்கான தலைப் பிறை தென்பட்டுள்ளது. இதையடுத்து புனித ஹஜ் பெருநாளை எதிர்வரும் 29 ஆம் திகதி கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புனித துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு நேற்று திங்கட்கிழமை

15

# இலங்கைக்கு 70 கோடி டொலர் உலக வங்கி வழங்குகின்றது

லண்டன், ஜூன் 20

இலங்கைக்கு 70 கோடி அமெரிக்க டொலர்கள் - சுமார் 21 ஆயிரம் கோடி இலங்கை ரூபாய் நிதி உதவியை உலக வங்கி அடுத்த வாரம் ஒப்புதல் வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி இலங்கைக்கான வரவு - செலவு மற்றும் நலன்புரி ஆதரவில் 70 கோடி டொலர்களை உலக வங்கி அங்கீகரிக்கும் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின்

15



# ஜனாதிபதி ரணிலுக்கு லண்டனில் எதிர்ப்பு!

லண்டன், ஜூன் 20

லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று இரு இடங்களில் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

முதலாவது போராட்டம் ரணில் விக்ரமசிங்க தங்கியுள்ள பார்க்லேன் இன்ரர் கொண்டினென்ரல் ஆடம்பர விடுதிக்கு அருகே நேற்று பிற்பகல் நடைபெற்றது.

மற்றைய போராட்டம், ரணில் விக்ரமசிங்க பங் கெடுக்கும் சர்வதேச ஜனநாயக ஒன்றிய

15

# கடந்த 6 மாதங்களில் மாத்திரம் விபத்துகளில் 1,043 பேர் பலி

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் கடந்த ஆறு மாதங்களில் மட்டும் வீதி விபத்துகளால் ஆயிரத்து 43 பேர் உயிரிழந்தனர். 8 ஆயிரத்து 875 வீதி விபத்துகளில் இந்த மரணங்கள் சம்பவித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து மரணங் களில் பெரும்பாலானவை மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள் மற்றும் பேருந்துகளால் ஏற்பட்டவை என்று

15

# கல்வியை கைவிட்டவர்களுக்கு இலவச தொழில் பயிற்சிகள்!

## பிரதமர் தினேஷ் பணிப்பு

கொழும்பு, ஜூன் 20

பொருளாதார நெருக்கடிகள் உள்ளிட்ட பல காரணங்களால் பாடசாலை கல்வியை இடைநடுவில் கைவிட்ட மாணவர்களுக்கு இலவச தொழில் பயிற்சிகளை வழங்கி, தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன பணித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை கொழும்பு - மஹரகம பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், பல்வேறு காரணங்களால் பாடசாலை கல்வியை இடைநடுவில் கைவிட்ட சிறுவர்கள் குறித்து முறையான அறிக்கை ஒன்றை தயாரித்து இலவச பயிற்சி

15

# புதிய அணியாக விரைவில் ஆட்சியை பொறுப்பேற்போம்!

## நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, ஜூன் 20

ஜனநாயகத்தின் பெயரில் முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாதத்தை அழிக்கவே ரணிலை நாம் கொண்டு வந்தோம். நாம் எடுத்த அரசியல் மாற்றம் சிறந்தது என்று மக்கள் கருதுகிறார்கள்.

வெகுவிரைவில் புதிய அணியாக ஆட்சியைப் பொறுப்பேற்போம். ஆகவே, தேர்தலை விரைவாக நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம் - என பாராளுமன்ற உறுப்பினர் நாமல்

15

# எனது குடும்ப அங்கத்தவர்கள் அரசியலில் ஈடுபடமாட்டார்கள்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஜுன் 20

**தனது மனைவி ஜலனி பிரேமதாஸ தீவிர அரசியலில் ஈடுபடவுள்ளார் என்று வெளியான தகவலை மறுத்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ சமூக சேவையில் ஈடுபட்டாலும் தமது குடும்ப உறுப்பினர்கள் எவரும் தீவிர அரசியலில் ஈடுபடமாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார்.**

எனது மனைவியும் மற்றவர்களும் தீவிர அரசியலில் ஈடுபட உள்ளனர் என்று சிலர் கூறுகின்றனர். எவ்வாறாயினும், எனது குடும்ப உறுப்பினர்கள் யாரும் அரசியலில் ஈடுபட மாட்டார் கள். ஆனால், சமூக சேவையில் ஈடுபடுவார்கள் என்று நான் உங் களுக்கு உறுதியளிக்கிறேன் .

“கடந்த காலத்தில் நாட்டின் முதல் பெண்மணிகள் சமூக சேவையில் தீவிரமாகப் பங்கு கொண்டார்கள். மறைந்த ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் மனைவியான காலஞ்சென்ற எலினா ஜெயவர்த்தன சேவா வந்தித இயக்கத்தின் மூலம் சமூக சேவையில் ஈடுபட்டிருந்தார். என் அம்மாவும் சமூக சேவை இயக்கத்தில் பங்கு கொண்டிருந்தார். 1994ஆம் ஆண்டுக்கு பிறகு அந்த இயக்கம் செயல்படவில்லை. எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் சேவா வந்திதா இயக்கத்துக்கு புத்துயிர் அளிக்கும், இதனால் அரசியல் தலைவர்கள் மற்றும் அமைச்சர்களின் மனைவிகள் சமூக சேவையில் ஈடுபட்டு மக்களுக்கு சேவை செய்யமுடியும் - என்றார். (ஐ)

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் நடமாடும் சேவை நாளை மறுதினம்!

யாழ்ப்பாணம், ஜுன் 20

யாழ். மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை நவீன சந்தைத் தொகுதிக்கு செல்லும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள நுழைவாயிலில நடைபெறவுள்ளது.

இதில், வட்டாரம் 14, 25ஆம் வட்டாரங்களுக்கான ஆதன வரி அறிவித்தல் படிவம் - சோலை வரி வழங்கல், பெயர் மாற்ற விண்ணப்ப படிவம் வழங்கல், சைக்கிள் உரிமம் வழங்கல் போன்ற சேவைகள் வழங்கப்படவுள்ளன என்று யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

“பொது மக்களால் இது வரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி போன்றவற்றை பெற்று யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிப்படுத்த திட்டமிட்டுள்ளோம். அத்துடன், நடப்பாண்டின் ஆதன வரியை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் மூன்றாம், நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியில் 5 வீதத்தை கழிவாகப் பெற்றுக்கொள்ளலாம்”, - என்றும் ஆணையாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நாட்டில் இதய நோயாளரின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஜுன் 20

இதய நோயாளிகளின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக கொழும்பு தேசிய மருத்துவ மனையின் இதயநோய் தொடர்பான மருத்துவ நிபுணர் அனிது பத்திரண தெரிவித்துள்ளார்.

நாட்டில் அதிகரித்துவரும் காற்று மாசுபாடு இதய நோயாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வழிவகுத்துள்ளது. இந்நிலைமை தொடர்பில் மக்கள் அவதானம் செலுத்த வேண்டும். வெளியில் செல்லும் போது கூடுமான வரை முகக் கவசம் அணிந்துகொள்வது சிறந்தது.

காற்று மாசுபாடு இதய நோயை மட்டுமல்ல, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, புற்றுநோய் மற்றும் நீண்டகால நுரையீரல் நோய்கள் போன்ற தொற்றாத நோய்களையும் ஏற்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# அறகலய செயல்பாட்டாளர்களுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜுன் 20

பிரபல கலைஞர் தமிதா அபேரத்ன, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் மற்றும் இளைஞர் செயல்பாட்டாளர் ரதிந்து சேனாரத்ன என்ற ‘ரட்டா’ உள்ளிட்ட 9 அறகலய செயல்பாட்டாளர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தின் பிரதான நுழைவாயிலை மறித்த குற்றச்சாட்டின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஒக்ரோபர் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே, இந்த சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை அடுத்த விசாரணை திகதியில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வருடம் மே மாதம் 30 ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தின் பிரதான நுழைவாயிலை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் அறகலய செயல்பாட்டாளர்களுக்கு எதிராக கொம்பனித்தெரு பொலிஸார் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

அமரர் சிவசிதம்பரம் நினைவு:

# சைக்கிளோட்ட போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசு







யாழ்ப்பாணம், ஜுன் 20

தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சிவசிதம்பரத்தின் 100ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

புவிராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த சைக்கிள் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கிருஷ்ணா, ஜிவிந்தன், அனோஜன் ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பிடித்தனர்.

பெண்கள் பிரிவில் தர்மிசா, பிராசாந்தி முதல் இடங்களை தட்டிச் சென்றனர்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தினருடன் ஜெயந்தன், ஹரிகரன், பதுசன் ஆகியோர் வழங்கி வைத்தனர். (ஐ)

# குப்பிழான் சோதிவிநாயகர் ஆலய தேர்த் திருவிழா சிறப்புற நடந்தது

யாழ்ப்பாணம், ஜுன் 20

குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

காலை 08.30 வசந்த மண்டப பூசை வழிபாடுகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து பஞ்சமுக விநாயகப் பெருமான், வள்ளி - தெய்வயானை சமேத முருகப் பெருமான் ஆகிய தெய்வங்கள் உள்வீதியில் திருநடனத்துடன் எழுந்தருளி அதனைத் தொடர்ந்து சுவாமி சித்திரத் தேரில் எழுந்தருளினார்.



சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு பண்ணுடன் ஓதப்பட்டு, சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகரா கோஷம் முழங்க சித்திரத் தேர்களின் பவனி ஆரம்பமானது. பிரதான சித்திரத் தேரை ஆண் அடியவர்கள் ஒரு புறமும், பெண் அடியவர்கள் மறுபுறமும் வடம் தொட்டிழுத்தனர்.

இந்தத் திருவிழாவில் பல நூறு பக்தர்கள் பங்கேற்றனர். (ஐ)

# பெருந்திருவிழா

கொழும்பு, ஜுன் 20

திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோயில் பெருந் திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 20 தினங்கள் நடைபெறும் இந்தப் பெருந் திருவிழாவில் எதிர்வரும்- 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு கைலாச வாகன திருவிழாவும், ஜுலை 01 ஆம் திகதி சனிக்கிழமை இரவு திருமஞ்சத் திருவிழாவும், 05 ஆம் திகதி புதன்கிழமை இரவு சப்பைரதத் திருவிழாவும் 06ஆம் திகதி வியாழக்கிழமை காலை - 08 மணிக்கு தேர்த் திருவிழாவும் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை - 08.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்றையதினம் மாலை - 06 மணிக்கு கொடியிறக்க திருவிழாவும் நடைபெறும்.

# தனியாக வசித்த பெண்ணிடம் 19 பவுண் நகைகள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜுன் 20

தனியாக வசித்த பெண்ணை அச்சுறுத்தி 19 பவுண் நகைகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் பண்டத்தரிப்பு - வடலியடைப்பு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு நுழைந்த கொள்ளையர்கள் நகைகளை தருமாறு பெண்ணை மோசமாக தாக்கியுள்ளனர். அத்துடன், வீடு முழுவதும் தேடுதல் நடத்தி நகைகளையும் ஒரு தொகை பணத்தையும் கொள்ளையிட்டனர். அத்துடன், பெண்ணின் காதில் இருந்த தோடுகளையும் மிரட்டி பறித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கொள்ளையரின் தாக்குதலில் பாதிக்கப்பட்ட பெண் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03)

ஈழநாடு
Eelanadu
20.06.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் கட்சிகளின் கடிதம்?

தமிழ் கட்சிகள் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு மீண்டும் கதடிமொன்றை எழுதவுள்ளன. இது தொடர்பில் அந்தக் கட்சிகளின் தலைவர்கள் கூடி முடிவெடுத்துள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் புதுடில்லி செல்லவுள்ள நிலையில்தான் மேற்படி முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவை அணுகுவது தமிழ் கட்சிகளை பொறுத்தவரையில் தவிர்க்க முடியாத விடயம்தான். ஆனால், விடயங்கள் சரியாக அணுகப்படுகின்றனவா - என்பது முக்கியமானது.

ஏற்கனவே, ஆறு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியப் பிரதமருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தன. ஆனால், அந்தக் கடிதம் எழுதுகின்றபோது பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. கடிதம் எழுதிய பின்னரும் சிக்கல்கள் இடம்பெற்றிருந்தன. ஆரம்பத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாகவே விடயம் தீர்மானிக்கப்பட்டது - பின்னர், சமஷ்டியை உள்வாங்க வேண்டுமென்று வாதங்கள் தலைதூக்கின. தமிழரசு கட்சிக்கும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் தேவையற்ற விவாதங்கள் இடம்பெற்றன. கிணறு வெட்டப் போய் பூதம் கிளம்பிய கதையாக இந்திய பிரதமரிடம் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட முயற்சியானது - இறுதியில் சமஷ்டி மற்றும் இனப்பிரச்னை வரலாறு சொல்லும் கதையாக மாறியது.

கடிதம் எழுதிய பின்னரும் அதனை முறையாக அணுகவில்லை. ஒரு பிராந்திய சக்தியின் பிரதமருக்கு அனுப்பப்பட்ட கடிதம் பிரதமரின் பார்வைக்கு செல்வதற்கு முன்னர் அனைத்து ஊடகவியலாளர்களின் கைகளிலும் இருந்தது. கடிதம் முழுமையாக ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டது. பின்னர் எதற்கு பிரத்தியேகமாகக் கடிதத்தை அனுப்ப வேண்டும்?

தமிழ் மக்களின் அறிவை மற்றவர்கள் பரிகசிக்கும் வகையிலேயே கடிதம் அனுப்பும் படலம் முடிவுற்றது. இப்போது அடுத்த கடிதம் எழுதும் படலம் ஆரம்பமாகப் போவதாகக் கட்சிகள் கூறுகின்றன. இதனையாவது, சரியாகவும் நேர்த்தியாகவும் இந்தியாவின் கொள்கை நிலைப்பாட்டோடு நிற்கும் வகையிலும் எழுதுங்கள். 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசுவதுதான் உங்கள் நிலைப்பாடு என்றால் அது தொடர்பில் மட்டும் பேசுங்கள் - இல்லையென்றால், 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அதனை இந்தியா வலியுறுத்த வேண்டியதில்லையென்று கூறிவிட்டு விடயத்துக்கு இத்துடன் முற்றுப்புள்ளியிடுங்கள்.

தொடர்ந்தும் மக்களை மடையர்களாக்கிக் கொண்டிருக்கும் வகையில் செயல்படுவதை நிறுத்துங்கள். இல்லை - இன்றைய சூழலில் முன்நோக்கி பயணிப்பதற்கு 13ஆவது திருத்தச்சட்டம் உதவுமென்று நம்பினால் அதனை முன்வைத்து மட்டும் பேசுங்கள். இந்திய பிரதமருக்கும் வெளிவிவகார அமைச்சருக்கும் சமஷ்டி தொடர்பில் வகுப்பெடுக்கும் சிறுபிள்ளைத்தனத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள். கடிதம் எழுதப்பட்ட பின்னர், அதனை முறையாகக் கையாளுங்கள். முன்னர் இடம்பெற்ற தவறை மீண்டும் செய்துவிடாதீர்கள். முதிர்ச்சியை காண்பியுங்கள்.

# வெதுப்பக உற்பத்திகளின் விலையை 10 ரூபாய் குறைக்குமாறு அறிவித்தல்

### அமைச்சர் நளின் பெர்னாண்டோ

*கொழும்பு, ஜூன் 20*

பாண் மற்றும் சிற்றுண்டிகளின் விலையை 10 ரூபாயால் குறைக்குமாறு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

“430 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு கிலோகிராம் கோதுமை மா இப்போது சந்தையில் ரூ. 160 தொடக்கம் 170 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்தை தவிர்க்க கோதுமை மா அத்தியாவசிய சேவையாக்கப்பட்டுள்ளது. எனவே, கோதுமை மாவின் விலை மீண்டும் அதிகரிக்கப்படாது என்ற உத்தரவாதத்தில் வெதுப்பக உற்பத்திகளின் விலைகளைக் குறைக்கலாம்”, என்று அமைச்சர் கூறியுள்ளார்.

கோழி இறைச்சி விலை உயர்வை கட்டுப்படுத்துதல் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி உள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபை விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்தார். (ஐ)

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரிக்க பெற்றோரே காரணம்!

### மனநல மருத்துவர் குற்றச்சாட்டு

*கொழும்பு, ஜூன் 20*

நாட்டில் அண்மைய நாட்களில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பதற்கு பெற்றோர்களே, பிரதான காரணம் என கராப்பிட்டி போதனா மருத்துவமனையின் மனநல மருத்துவர் ரூமி ரூபன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெற்றோர்கள், பிள்ளைகள் மீது அதீத அக்கறை வெளிப்படுத்தாத நிலையாலேயே சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

குறிப்பாக குழந்தையொன்று உடல், மனம் மற்றும் பாலியல் என்ற மூன்று வழிகளில் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது. பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் குழந்தைகளின் சமூகப் பின்னணியை எடுத்து நோக்கினால் - இவர்களின் பெற்றோர்கள் பெரும்பாலும் வெளிநாடுகளில் உள்ளனர் அல்லது குழந்தைகளுடன் இருந்தாலும் சரி யான கவனமும் புரிதலும் பாதுகாப்பும் கிடைப்பதில்லை.

அனைத்து வயது பிரிவினரும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கும் செயல்களில் ஈடுபடுகின்றனர். இதற்கு உளவியல் மற்றும் பாலியல் பிரச்னைகள், மிகை பாலியல் ஆசைகள் மற்றும் தூண்டுதல்களை கட்டுப்படுத்த இயலாமை போன்ற விடயங்கள் உள்ளன. குறிப்பாக, மிரட்டல் மூலம் பாலியல் உணர்வை தூண்டுவதற்கு பல்வேறு தந் திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் மருத்துவர் கூறினார். (ஐ)

# தேர்தல் கட்டுப்பணத்தை திருப்பித் தருமாறு கோரிக்கை!

### ஐக்கிய மக்கள் சக்தி

*கொழும்பு, ஜூன் 20*

உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக செலுத்திய கட்டுப்பணத்தை திருப்பித் தருமாறு ஐக்கிய மக்கள் சக்தி உரிய அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளது.

அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தேர்தலுக்காக செலுத்திய கட்டுப்பணத்தை பயன்படுத்துவது சட்டவிரோதமானது - என்று திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

கட்சிகளும் வேட்பாளர்களும் தேர்தல் ஆணைக்குழுவில் செலுத்திய பணத்தை அரசாங்கம் பயன்படுத்துவதை நாங்கள் பார்க்கிறோம். அது சட்டவிரோதமானது. எனவே, கட்டுப்பணத்தை மீண்டும் வேட்பாளர்களிடம் வழங்குமாறு நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.

இதேவேளை தேர்தலை நடாத்தக் கோரி நாங்கள் தொடர்ந்தும் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைப்போம்” - என்றும் சொன்னார். (ஐ)


# நேர்முக வர்ணனை

*யாழ்ப்பாணம், ஜூன் 20*

புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ( கண்ணகை அம்மன்) ஆலய மகா கும்பாபிசேகத்தை முன்னிட்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் காலையும் மாலையும் கும்பாபிஷேக நேர்முக வர்ணனை நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நேர்முக வர்ணனையை சைவப்புலவர்கள் செ. கந்த. சத்தியதாசன், சி. கா. கமலநாதன் , பொன். சந்திரவேல், இளம்சைவப் புலவர் ச. நவநீதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். தைரியமான முடிவு எடுக்கும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். புதிய பாதை தெரியும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் பல முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஊழியர்களை குறை கூற வேண்டாம். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். மேலதிகாரிகளிடம் மோதல்கள் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மேலதிகாரி பாராட்டுவார். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். புது அதிகாரி உங்களை மதிப்பார். முயற்சிகள் பலிதமாகும்

**துலாம்**
சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள் பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். சிந்தனை திறன் பிறக்கும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் பொறுமையை இழப்பீர்கள். வேலையாட்களை அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நல்லது. தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க பாருங்கள்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பாராத நன்மை கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சமங்களை சொல்லித் தருவார். பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் கைஓங்கும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மீனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

# இராமநாதபுரத்தில் போட்டியிட பிரதமர் மோடி தீவிர ஆலோசனை!

சென்னை, ஜுன் 20

எதிர்வரும் மக்களவை தேர்தலில் தமிழ்நாடு இராமநாதபுரத்தில் போட்டியிடுவது குறித்து இந்திய பிரதமர் நரேந்திரமோடி தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார் என்று அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு மாநிலங்களில் நீடிக்கும் மோடி அலை தென்னிந்தியாவில் இல்லை. இந்த நிலையில், மோடி அலையை தென்னிந்தியாவில் ஏற்படுத்தும் நோக்கிலேயே பா. ஜ. க. இந்தத் திட்டத்தை வகுக்கிறது என்று கூறப்படுகின்றது.

அண்மைக்காலமாக மத்திய அரசாங்கம் தமிழகத்துக்கு அதி முக்கியத்துவம் வழங்குகிறது. தமிழ் இலக்கியங்கள் குறித்து அதிகம் பேசும் மோடி, பாராளுமன்றத்தில் தமிழ் மரபுப்படி செங்கோல் வைத்ததும் தமிழர்களை



ஈர்க்கும் நோக்கமே என்று கூறப்படுகின்றது.

முன்னதாக நரேந்திர மோடி தமிழகத்தில் போட்டியிட விரும்புகிறார் என்று வதந்தி கிளம்பியது. ஆனால், இதனை உண்மையாக்கும் எண்ணத்தில் மோடி பரிசீலித்து வருகிறார் என்று கூறப்படுகின்றது.

2014 மக்களவைத் தேர்தலில் உத்தரபிரதேசத்தின் வாரணாசியில் போட்டியிட்டு மாபெரும் வெற்றி பெற்றார் மோடி. 2019 மக்களவைத் தேர்தலில், வாரணாசியுடன் குஜராத்தின் வதோதராவிலும் போட்டியிட்டு இரண்டிலும் வென்றார். பின்னர் வதோதரா எம். பி. பதவியை இராஜினாமா செய்தார்.

இந்நிலையில் 2024 மக்களவைத் தேர்தலில் வாரணாசியுடன் தமிழகத்தின் இராமநாதபுரம் தொகுதியிலும் போட்டியிட பிரதமர் மோடி வியூகம் அமைக்கிறார் என்று கூறப்படுகின்றது.

இதில், அவர் வென்றால் பா. ஜ. கவுக்கு பல மடங்கு நன்மை கிடைக்கும், தோல்வியுற்றால் பா. ஜ. கவின் அதேநிலை தொடரும். அதற்கேற்ப சமீபத்தில் தமிழகம் வந்த மத்திய அமைச்சர் அமித் ஷா, "அடுத்து தமிழ்நாட்டில் இருந்து ஒருவர் பிரதமராக வருவார்' என கூறிச் சென்றுள்ளார் என்று கூறப்படுகின்றது.

(ஐ)

# ஆளுநர் ரவியை பதவி நீக்கக் கோரி ம. தி. மு. க. கையெழுத்து போராட்டம்!

சென்னை, ஜுன் 20

தமிழக ஆளுநர் ஆர். என். ரவியை பொறுப்பிலிருந்து அகற்றக் கோரி ம. தி. மு. க. சார்பில் இன்று செவ்வாய்க்கிழமை கையெழுத்து இயக்கம் நடைபெறும் என்றும் சென்னையில் கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ கையெழுத்து இயக்கத்தைத் தொடக்கி வைப்பார் எனவும் அந்தக் கட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள செய்தியில்,

ம. தி. மு. கவின் 29ஆவது பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், தமிழக ஆளுநர் பொறுப்பிலிருந்து ஆர். என். ரவியை அகற்றக் கோரும் கையெழுத்து இயக்கத்தை ம. தி. மு. க. 20.06.2023 (இன்று) காலை 11 மணிக்கு தமிழகம் முழுவதும் தொடங்கி நடத்துகிறது.

தலைநகர் சென்னையில், தலைமைக் கழகம் அமைந்துள்ள தாயகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ கலந்துகொண்டு கையெழுத்து இயக்கத்தைத் தொடக்கி வைக்கிறார்.

கட்சியின் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட கழக செயலாளர்கள் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி, மக்கள் இயக்கமாக நடத்துவார்கள் - என்றுள்ளது.

(ஐ)

# அ. தி. மு. க. யாருக்கும் அடிமை இல்லை! தி. மு. கவே அடிக்கடி கொள்கை மாறுகிறது

## எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு

சேலம், ஜுன் 20

"1999இல் மத்தியில் பா. ஜ. க. ஆட்சி நடந்துகொண்டிருந்த போது, தி. மு. கவைச் சேர்ந்த எம்.பி.,க்கள் அதில் அமைச்சர்களாக இடம்பெற்றார்களா? இல்லையா? காலத்துக்கு ஏற்றபடி தங்களுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளக்கூடிய ஒரே கட்சி தி. மு. கதான். நாங்கள் யாருக்கும் அடிமை இல்லை" என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனி சாமி கூறியுள்ளார்.

"தமிழகத்தில் மிகப்பெரிய பணியை நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். எனவே, நாங்கள் யாருக்கும் அடிமை அல்ல. ஏன், இதே தி. மு. க. 1991ஆம் ஆண்டு பா. ஜ. கவுடன் பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிட்டதா? இல்லையா?

1999இல் மத்தியில் பா. ஜ. க. ஆட்சி நடந்துகொண்டிருந்த போது, தி. மு. கவைச் சேர்ந்த எம்.பி.,க்கள் அதில் அமைச்சர்களாக இடம்பெற்றார்களா? இல்லையா? காலத்துக்கு ஏற்றபடி தங்களுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளக்கூடிய ஒரே கட்சி தி. மு. கதான். ஆனால், நாங்கள் யாருக்கும் அடிமை இல்லை.

கூட்டணி என்பது எல்லா கட்சிகளுமே, அரசியல் சூழலுக்கும் தக்கவாறு அவ்வப்போது தேர்தல் வருகின்றபோது அமைக்கப்படுகிற ஒரு நிகழ்வு. ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் அந்தக் கட்சி செயல்படும். அ. தி. மு. கவுக்கென்று கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் நாங்கள் கூட்டணி அமைத்துக் கொள்வோம் - என்றார்.

# திரைப்படத்தில் நடிப்பது மாத்திரமே நாட்டை ஆள்வதற்கான தகுதி இல்லை!

## நாம் தமிழர் சீமான்

சென்னை, ஜுன் 20

திரைப்படத்தில் நடிப்பது மட்டுமே நாட்டை ஆள்வதற்கான தகுதி என நினைப்பது அவமானகரமானது என, சீமான் தெரிவித்தார்.

ஒரு நாட்டில் நீர் வளம், நில வளத்தை தாண்டி அறிவு வளம் முக்கியம், நாட்டின் எதிர்காலமே வகுப்பறையில் தான் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால், வகுப்பறை வர்த்தக அறையாக மாறி விட்டது. யார் அதிகம் பணம் கொடுக்கிறார்களோ அவர்கள் நல்ல கல்வியை கற்றுக்கொள்ளலாம்.

பல அரசு பள்ளிகள் மூடப்படும் நிலை உள்ளது. நெல் கொள்முதலுக்கு கூடுதல் விலை கொடுக்கலாம். ஆனால், அதனை சேமித்து வைக்க களஞ்சியங்கள் உள்ளனவா?. ஆனால் மதுபானங்களை களஞ்சியப்படுத்த களஞ்சியம் உள்ளது. அதற்கு பாதுகாப்பும் உள்ளது.

நடிகர் சூர்யா அகரம் பௌண்டேஷன் மூலம் பல ஆண்டுகளாக மறைமுகமாக உதவிகளை செய்து வருகிறார். ஆனால், நடிகர் விஜய் அரசியல் கட்சி ஆரம்பித்து, அரசியலுக்கு வர விரும்புவதால் உதவிகளை வெளிப்படையாக செய்து வருகிறார். படிக்கும் மாணவர்களை ஊக்கப்படுத்துவதை வரவேற்கலாம் - பாராட்டலாம்.

வாக்கு செலுத்துவதற்கு பணம் கொடுக்கவும், வாங்கவும் கூடாது என்ற எனது கருத்துக்கு வலுசேர்க்கும் வகையில் விஜய் பேசியுள்ளார். அது வரவேற்க வேண்டிய விஷயம். நடிகர் விஜய் அரசியலுக்கு வருவதை வாழ்த்துவோம். அவர் அரசியலுக்கு வந்து மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று நினைக்கிறார். நல்லது செய்வதை தட்டிக் கொடுக்கலாம் - தள்ளி விடக்கூடாது - என்றார்.

(ஐ)

# தமிழர் பிரச்னை தீர்வுக்கு இந்தியா ஊடாக அழுத்தம்

## இந்திய பிரதமர் மோடிக்கு தமிழ் தேசிய கட்சிகள் கடிதம் அனுப்பும் என்கிறார் சிவசக்தி ஆனந்தன்



**வவுனியா, ஜுன் 20**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியவுக்கான முதலாவது பயணத்துக்கு முன்னதாக தமிழர் பிரச்னையை தீர்க்க அழுத்தம் கொடுக்க வேண்டி தமிழ்க் கட்சிகள் இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பவேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் கே. பத்மநாபாவின் 33ஆவது நினைவுதினம் நேற்று வவுனியாவில் அவரின் சிலை அருகே நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், யுத்தம் முடிந்து 14 ஆண்டுகளில் தமிழ் மக்கள் தீர்வு ஒன்றையோ அல்லது போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஏனைய பிரச்னைகளோ தீர்க்கமுடியாத நிலையிலேயே தமிழ் மக்களின் நிலை உள்ளது. இதற்கு அப்பால் ஒரு சில கட்சிகளை தவிர ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகள் மீண்டும் இந்தியாவை நாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா இல்லாமல் இந்த பிரச்னையை தீர்க்கமுடியாது என்று சொல்லியே நாடியிருக்கின்றது. இந்திய பிரதமர் ஈழத் தமிழர்களின் பிரச்னைக்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது. ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் நிர்வாகம் நேற்று கூடியபோது முக்கியமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதாவது, 21 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய பிரதமரை சந்திக்க உள்ளார். இந்த சந்திப்பில் ஈழத்தமிழர்களின் பிரச்னைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை காணவேண்டும்.

இதற்கப்பால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் உள்ள 13 ஆவது திருத்த சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைக்குள்ள முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று இந்திய பிரதமர் ஊடாக ஜனாதிபதியை வலியுறுத்தவும் இதற்காக இந்திய பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதவும் முயற்சிகள் நடக்கின்றன. இந்தக் கடிதத்தில் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் பங்கேற்பு இருக்கவும் கவனம் செலுத்தப்படுகின்றது என்றும் கூறினார்.

## மனித உரிமைகள் ஆணையாளர் காலமானார்

கொழும்பு, ஜுன் 20

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமால் கருணசிறி காலமானார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இதனை அறிவித்துள்ளது. உடல்நலபாதிப்பால் அவர் இயற்கை எய்தினார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அரைவட்டக் கற்கள் இந்துக்களுடையது அவை சந்திரவட்டக் கற்கள் கிடையாது!

### யாழ். பல்கலைக்கழக வேந்தர் பத்மநாதன்

மட்டக்களப்பு, ஜுன் 20

இந்து ஆலயங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அரை வட்டக் கல்லுக்கும் பௌத்தர்களின் சந்திரவட்டக் கல்லுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன என்று வரலாற்று பேராசிரியரும் யாழ். பல்கலைக்கழக வேந்தருமான சி. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான சாசனவியல் பயிற்சி கருத்தரங்கு நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு நாவற்குடாவில் இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய பேராசரியர்,

இந்துக்களின் ஆலயங்களின் வரலாறுகள் தேவாரங்களுடன் தான் ஆரம்பமாகின்றது என்ற நிலை இருந்துவந்தது. இப்போது அந்த நிலைமை முற்றாக மாறிவிட்டது. திருகோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் போன்று முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், திருக்கோவில், கொக்கட்டிச் சோலை போன்ற ஆலயங்கள் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையானவை என்பதை நாங்கள் தமிழ் சாசனங்களை பயின்றதால் நிறுவிக்கொள்ளமுடிந்தது.

அதுமட்டுமின்றி தற்போதெல்லாம் அரைவட்டக்கல் இருந்தால் அது சைவ ஆலயங்களுக்கு ஒரு பேரிடராக அமைந்துவிடுகின்றது. முன்பு பௌத்த ஆலயம் இருந்தது அதனை இடித்துவிட்டு ஆலயம் கட்டியுள்ளீர்கள் என்று கூறுகின்றார்கள். கொக்கட்டிச் சோலையில் அரைவட்டக்கல் இருக்கின்றது. அகத்தீஸ்வரத்தில் அரைவட்டக்கல் இருக்கின்றது. இந்த அரைவட்டக்கற்களுக்கும் இவர்கள் சொல்லும் சந்திரவட்டக் கல்லுக்கும் இடையே வேறுபாடு உண்டு - என்றார். (ஐ)

## சுரண்டப்படும் மலையக மக்களுக்கு ஆதரவாக ஜெனிவா செல்கிறேன்!

### அமைச்சர் ஜீவன் தொண்டமான்

கொழும்பு, ஜுன் 20

மலையக மக்கள் சுரண்டப்படுவதை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டுவரும் நோக்கில் ஜெனிவா செல்லவுள்ளேன் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் அளித்த நேர்காணல் ஒன்றிலேயே இதனைத் தெரிவித்தார்.

தேயிலை தொழில்துறையில் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களின் சுரண்டல்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதற்காக ஜெனிவாவில் ஒக்ரோபரில் நடைபெறும் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளேன். எனது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குழு இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளும்.

பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களின் சுரண்டல்களை அம்பலப்படுத்தவேண்டிய தருணம் இது. சர்வதேச தேயிலை கொள்வனவாளர்களிடம் தாங்கள் நியாயமான வர்த்தகம் மற்றும் நெறிமுறை நடைமுறைகளை கடைப்பிடிப்பதாக பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள் தெரிவிக்கின்ற போதிலும் உண்மையில் அவர்கள் அவ்வாறு செயல்படவில்லை என்பதை நான் அம்பலப்படுத்தப்போகின்றேன் - என்றும் கூறினார். (ஐ)

### கஜேந்திரகுமார் எம். பி. கைது:

## மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம்!

வடமராட்சி, ஜுன் 20

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் மற்றும் அவரின் கட்சி உறுப்பினர்களின் கைதுக்கு கண்டனம் தெரிவித்து மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக கட்சியின் மகளிர் பிரிவால் கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் போது, பொலிஸாரின் அராஜகம் ஒழிக, மருதங்கணி பொலிஸாரே பொய் வழக்கு போடாதே, இந்த மண் எங்களின் சொந்த மண், மருதங்கேணி எங்கள் சொத்து, அபகரிக்காதே அபகரிக்காதே நிலங்களை அபகரிக்காதே, வடக்கு - கிழக்கு தமிழரின் தாயகம்", என்று கோஷங்கள் வலியுறுத்தப்பட்டன.

நேற்று முற்பகல் 10:30 மணியளவில் மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக நடந்த இந்தப் போராட்டத்தில் பல பெண்கள் பங்கேற்றனர். அத்துடன், இந்தப் போராட்டத்துக்கு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் பங்கெடுத்து ஆதரவு வழங்கியது. (ஐ-02)

# கனடாவில் யாழ். பெண் கொலை; கணவனே சூத்திரதாரியென தீர்ப்பு

றொறன்ரோ, ஜுன் 20

வடமராட்சியை சேர்ந்த தமிழ் குடும்ப பெண் ஒருவர் கனடாவில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில், அவரே கணவரே சூத்திரதாரி என்று நீதிமன்றம் உறுதி செய்தது.

11 வார விசாரணைக்குப் பிறகு, விஜேந்திரன் பாலசுப்ரமணியம் தனது மனைவி தீபா சீவரத்தினம் (வயது 38) என்பவரை சுட்டுக்கொன்ற சம்பவத்தில் வாடகை கொலையாளிகளை பயன்படுத்தியது உறுதியானது.

மார்ச் 13, 2020 அன்று ஷெப்பர்ட் அவென்யூ ஈஸ்ட் மற்றும் பிரிம்லி சாலைக்கு அருகிலுள்ள குடியிருப்புப் பகுதியில் இந்த கொலை நடந்தது.

இந்த கொலை சதித்திட்டத்தின் சூத்திரதாரி கணவர் விஜேந்திரன் பாலசுப்ரமணியம் என்று றொறன்ரோ ஜூரி கண்டறிந்தது.

விஜேந்திரன் தனது மனைவியைக் கொல்ல வாடகைக்கு அமர்த்திய ஸ்டெட்லி கெர், முதல் நிலை கொலை மற்றும் தீபாவின் வயதான தாயை சுட்டுக் கொல்ல முயற்சி செய்ததில் குற்றவாளி என்று ஜூரிகள் கண்டறிந்தனர். கொலைக்கு சதி செய்ததாக இருவருக்குமே தண்டனை விதிக்கப்பட்டது.

கெர்ரின் நண்பரான கேரி சாமுவேல், அவரை சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்று கொலை செய்தாரெனக் குற்றம் சாட்டப்பட்டார்.

குற்றம்சாட்டப்பட்ட 3வது நபர் ஆஷ்லே ஓவன் (துப்பாக்கிதாரி கெர்ரின் காதலி), கொலை செய்ய சதி செய்தல் மற்றும் கொலைக்குப் பிறகு கெருக்கு துணையாக இருப்பது அல்லது உதவி செய்தல் உள்ளிட்ட அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டார்.

ஜூரிகள் புதன்கிழமை பிற்பகலில் தங்கள் விவாதங்களைத் தொடங்கிய பின்னர் வெள்ளிக்கிழமை மாலை தீர்ப்பளிக்கப்பட்டது. அரச வழக்கறிஞர்கள் சில்வானா கபோக்ரெகோ மற்றும் பென் ஸ்னோ இந்த வழக்கை "துரோகம் மற்றும் திட்டமிட்ட கொலையின் சோகமான கதை" என்று அழைத்தனர்.

சம்பவ தினமான காலை 9:40 மணியளவில், வீட்டு வாசலில் மணி அடிக்கும் சத்தம் கேட்டு, தாயார் கீழே இறங்கி வந்துள்ளார். பொதி விநியோக சேவையிலிருந்து வந்துள்ளதாக அந்த நபர்கள் தெரிவித்தனர். கீழே பேச்சு சத்தம் கேட்டதும், தீபா மாடியிலிருந்து கீழே இறங்கி வந்துள்ளார். அவர் வாசலுக்கு அண்மையாக வந்த போது, கெர் வீட்டுக்குள் நுழைந்து தீபாவை பல முறை சுட்டுக் கொன்றார். பின்னர் அவரின் தாயையும் சுட்டார். படுகாயமடைந்த தாயார் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்து, இந்த சம்பவத்தின் முதலாவது சாட்சியாக உள்ளார்.

பொதியிடல் நிறுவனத்தில் பணியாற்றும் தீபா, இரவு பணி முடிந்து விட்டு சம்பவம் நடந்த அன்று காலை 7 மணியளவில் வீடு திரும்பியிருந்தார்.

தீபா மற்றும் விஜேந்திரன் ஆகியோரின் 18 ஆண்டுகால மணவாழ்க்கையில் கொலைக்கு முன்னரான சமீப காலத்தில் முரண்பாடுகள் காணப்பட்டன.

தீபாவின் தங்கை முறையான ஒருவருடன் விஜேந்திரனுக்கு தகாத உறவு தொடங்கிய பின்னர் இந்த தகராறுகள் ஏற்பட்டன.

விஜேந்திரன் தொழிலில் வெற்றியடைந்து நிதி ரீதியாக நல்ல நிலையில் இருந்தார். வீடுகளை வாங்கி - விற்பனை செயதலில் அவர் ஈடுபட்டிருந்தார். அவர் தனது மனைவியை மிகவும் கட்டுப்படுத்தி உடல் ரீதியாக துன்புறுத்தினார் என்று விசாரணையில் கூறப்பட்டது.

தற்போது நோர்வேயில் வசிக்கும் தீபாவின் இளைய உறவினருடன் புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்காக, தீபா இறந்துவிட வேண்டும் என்று அவர் திட்டமிட்டதாக சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

வழக்கில் விஜேந்திரன் கொலைக்கு ஏற்பாடு செய்யப்பட்டமை தொடர்பான கைபேசி பேச்சு, கமெரா பதிவுகள் போன்ற ஆதாரங்களும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

சாட்சியங்களின், ஆதாரங்கள் அடிப்படையில் விஜேந்திரன் முதல் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டார். அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனை தொடர்பான விசாரணை ஜுன் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ)

# 40 இ. போ. ச. சாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை?

கொழும்பு, ஜுன் 20

**இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான நஷ்டத்தில் இயங்கும் சாலைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 107 சாலைகளில் 40 சாலைகள் தற்போது தொடர்ந்து நட்டத்தில் செயல்படுகின்றன. இவற்றில் பெரும்பாலான சாலைகள் கிராமப்புறங்களில் இருக்கின்றன என்றும் அந்த அதிகாரி கூறினார்.

நட்டத்தில் இயங்கும் சாலைகளை மூடுவதற்கு முன்னர் அவற்றை இலாபமீட்டுபவையாக மாற்ற முயற்சி செய்யப்படுகின்றது. இது கைகூடாத பட்சத்தில் அவை மூடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் பதவிக்கு பெயர் பரிந்துரை!

கொழும்பு, ஜுன் 20

இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒருவரின் பெயரை முன்மொழிந்துள்ளார்.

அரசமைப்பு பேரவையின் ஒப்புதலுக்காக அந்தப் பெயர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அரசமைப்பு பேரவை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை கூடுகின்றது. இதன்போது, ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரே இந்தப் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்று அறிய வருகின்றது. (ஐ)

*ஊழல் எதிர்ப்பு சட்டம்:*

# எமது பரிந்துரைகளை சேர்க்காதுவிடின் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது!

கொழும்பு, ஜுன் 20

பாராளுமன்றத்தில் இந்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ள ஊழல் எதிர்ப்பு சட்ட மூலம் பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது. எனவே, எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் உள்ளடக்கப்படாவிட்டால் குறித்த சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஒப்பந்தத்துக்கு அமைய ஊழல் ஒழிப்பு சட்டமூலம் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இந்த வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் இது குறித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை வினவிய போதே அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில் மக்கள் எதிர்பார்த்த பல விடயங்களை அரசாங்கம் நீக்கியுள்ளது. எனவே, தற்போது காணப்படும் சட்டமூலத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாட வேண்டியுள்ளது.

எமது நாட்டிலிருந்து கொள்ளையடித்துச் செல்லப்பட்ட பணம், சொத்துக்கள் என்பவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடு இந்த சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். இதே போன்று இதனுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும்.

எனினும், இது தொடர்பான எந்தவொரு ஏற்பாடுகளும் இந்த சட்ட மூலத்தில் இல்லை. எமது நிலைப்பாட்டை நாம் அறிவித்திருக்கின்றோம். இந்த சட்ட மூலம் முழுமையானதல்ல. எனவே தற்போதுள்ள குறைபாடுகளை நீக்கி அதனை சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றோம். அவ்வாறில்லை எனில் இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது - என்றார். (ஐ)

## நுண்ணுயிரியல் பிரிவு மூடப்பட்டதால் தனியார் ஆய்வகங்களுக்கு இலாபம்!

*சுகாதார வல்லுநர் சங்கம் சாடல்*

கொழும்பு, ஜுன் 20

தேசிய மருத்துவமனையின் நுண்ணுயிரியல் பிரிவு இரண்டு மாதங்களாக செயல்படாததால் சுமார் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான பல பரிசோதனைகள் தனியாருக்கு ஒரேயடியாக அனுப்பி வைக்கப்படுகின்றன என்று சுகாதார வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

மேலும், பரிசோதனைகளை அந்தந்த தனியார் ஆய்வகங்களுக்கு அனுப்பும் அதிகாரிக்கு 20வீதம் முதல் 40வீதம் வரை தரகுப் பணம் வழங்கப்படுகிறது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதனால் அதிகாரிகள் தாங்கள் பெறும் தரகுப் பணத்தை இழக்க நேரிடும் என்பதால் அரசு ஆய்வகங்களை சீரமைக்க மாட்டார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய மருத்துவமனையின் நுண்ணுயிரியல் பிரிவினால் நோயாளிகள் தினமும் சுமார் 200 சிறுநீர் பரிசோதனைகள் வரை மேற்கொள்ளப்படும். தினமும் சுமார் 10 ஆயிரம் பரிசோதனைகள் தனியார் ஆய்வகங்களுக்கு திருப்பி விடப்படுகின்றன.

தேசிய மருத்துவமனைக்கு அருகாமையில் உள்ள ஆய்வுகூடத்தில் இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு குறைந்தது 3,000 ரூபாய்க்கும் அதிகமாக செலவழிக்க வேண்டியுள்ளது.

பணப்பற்றாக்குறை காரணமாக பல நோயாளர்கள் தமக்கு பரிந்துரைக்கப்பட்ட மருத்துவ பரிசோதனைகளை செய்வதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பரிந்துரைக்கப்பட்ட மருத்துவ பரிசோதனைகளை செய்யாததால், நோயாளிகளின் நிலை மோசமாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டிய நிலை உள்ளது என்றும் அவர் கூறினார்.

இதனால் ஏற்படும் சிக்கல்களைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு பெருமளவு பணத்தைச் செலவிட வேண்டியிருக்கும் என்றும் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். (ஐ)

## இராஜாங்க அமைச்சரின் வீட்டின் மீது தாக்குதல்!

கொழும்பு, ஜுன் 20

இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவின் களனியில் உள்ள வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

களனி சரத்சந்திர டயஸ் மாவத்தையில் அமைந்துள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் இரவு 10.50 மணியளவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாத குழுவொன்று அங்கு வந்து இராஜாங்க அமைச்சரின் வீட்டின் கதவுகள் மற்றும் யன்னல்களை சேதப்படுத்தியது.

தாக்குதலின் போது, ஊழியர் ஒருவரே வீட்டில் இருந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர நேற்று காலை அந்த வீட்டுக்கு வந்துள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் சபுகஸ்கந்தை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## போலி ஆவணங்கள் மூலம் கடன் பொலிஸ் அதிகாரிக்கு விசாரணை

கொழும்பு, ஜுன் 20

பாணந்துறை பொலிஸ் அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் போலியான கையொப்பத்தைப் பயன்படுத்தியதுடன், சம்பள அறிக்கையையும் போலியான தரவுகளுடன் சமர்ப்பித்து இலட்சக்கணக்கான ரூபாயை கடனாகப் பெற்ற பொலிஸ் பரிசோதகர் ஒருவருக்கு எதிராக விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று களுத்துறை மாவட்ட மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு மோசடியான முறையில் இரண்டு முறை கடன்களை குறித்த பிரதான பொலிஸ் பரிசோதகர் பெற்றுள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது.

குற்றச்சாட்டுக்குள்ளான பிரதான பொலிஸ் பரிசோதகர் தற்போது பாணந்துறை பொலிஸ் பிரிவில் கடமையாற்றி வருகின்றார். (ஐ)

# எனக்காக மட்டும் ரூ. 5 கோடியை செலவிடவில்லை என்கிறார் சப்ரி

கொழும்பு, ஜுன் 20

வெளிநாட்டு பயணங்களுக்காக 5 கோடி ரூபாயை தமக்கு மாத்திரம் செலவிடவில்லை என்று கூறியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மறுத்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் வெளிநாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணங்களுக்காக 5 கோடி ரூபாயை செலவிட்டார் என்று செய்திகள் வெளியாகின. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு செய்தியாளர் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் மூலம் இந்தத் தகவல் தெரிய வந்ததாக ஒரு ருவிற்றர் பதிவில் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் இந்த பணத்தை 7 வெளிநாட்டு பயணங்களுக்கு செலவிட்டதாக சாடப்பட்டது. எனினும் இந்த தகவல் தவறானது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது ஐக்கிய நாடுகள் சபை உட்பட்ட ஐந்து உத்தியோகபூர்வ தேசிய தூதுக்குழு பயணங்களுக்கும், அமெரிக்காவுக்கும் சவுதி அரேபியாவிற்குமான இரு தரப்பு பயணங்களின் மொத்த செலவாகும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



இந்த பயணங்களின்போது தாம் தூதுக்குழுக்களுக்கு தலைமை ஏற்றுச் சென்றார் என்றும் தெரிவித்துள்ள அலி சப்ரி, தம்மை தவிர மேலும் 22 அதிகாரிகள் இந்த பயணங்களில் இணைந்திருந்ததாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

# கோட்டாபயவுக்கு நடந்ததை ரணிலுக்கு நேரவிடமாட்டோம்!

## பொதுஜன பெரமுன கட்சி உறுதி

**கொழும்பு, ஜுன் 20**

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நடந்தது ஜனாதிபதி ரணில் விக்ர மசிங்கவுக்கு நடக்காது என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன உறுதியளிக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

நேற்று திங்கட்கிழமை ஊட கங்களுக்கு அவர் வழங்கிய செவ் வியில்,

"சவாலை எதிர்கொள்ளுமாறு கோட்டாபய ராஜபக்ஷ எதிர்க் கட்சித் தலைவருக்கு அழைப்பு விடுத்தார். ஆனால், அதை ஏற் றுக்கொள்ளும் துணிவு சஜித் துக்கு இருக்கவில்லை. இக்கட்டான சூழலில் ரணில் தானே முன்வந்து நாட்டைப் பொறுப்பேற்று இன்று அனை வரும் சுதந்திரமாக வாழக்கூடிய நாட்டை உருவாக்கியுள்ளார்"

"பொதுஜன பெரமுனவின ரான நாங்கள், இந்த அபிவிருத் தித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல தேவையான ஆதரவை வழங்குவோம். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நடந்தது ரணி லுக்கும் நடக்க நாம் அனும திக்க மாட்டோம். இது அரசி யல் பிரச்னை அல்ல. இது மக்க ளின் வாழ்க்கை தொடர்பான விடயம். அரசியலை நாங்கள் தேர்தல்வேளைகளில் செய்ய லாம்" - என்றும் கூறினார். (ஐ)

# அரச ஊழியர்களின் சம்பளம் இந்த வருடத்தில் உயரலாம்!

கொழும்பு, ஜுன் 20

இந்த வருட இறுதிக்குள் நிலைமை சீராக இருந்தால் அரச ஊழியர்களின் சம்பளம் அதிக ரிக்கப்படும் என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர் செய் தியாளர்களை சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்கு முன் னர் இன்னும் ஓரிரு சந்தர்ப்பங் களில் எரிபொருளின் விலையும் குறையலாம். விவசாயிகள் தங்க ளுக்குத் தேவையான உரங்களின் விலை குறைவதையே எதிர்பார்க் கின்றனர் மாறாக அதிகரிப்பை எதிர்பார்க்கவில்லை.



இதேவேளை ஊழலுக்கு எதி ரான சட்டமூலம் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வில் சமர்ப் பிக்கப்பட்டு அதற்கான அனும தியைப் பெற்றுக்கொடுக்கும் பணி மேற்கொள்ளப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஆளும் கட்சியினருக்கு ஜனாதிபதி அழைப்பு!

கொழும்பு, ஜுன் 20

ஆளும் கட்சியின் விசேட குழுக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட் டத்தில் ஆளும் கட்சியின் அனைத்து அமைச்சர்களின் பங் கேற்பு கட்டாயமாக்கப்பட்டுள் ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் இந்த விசேட கூட்டம் நடை பெறவுள்ளது.

இதனிடையே, எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அமைச் சர்கள் எவரும் வெளிநாடு செல் லக்கூடாது என்றும் கொழும்பி லேயே தங்கியிருக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்துள் ளார் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

# ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க காணியை விற்கிறது திணைக்களம்!

கொழும்பு, ஜுன் 20

கூட்டுத்தாபன ஊழியர்கள் மற்றும் தேசிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆணைய ஊழியர்களுக்கான சம்பளம், நிலுவையிலுள்ள சம்பளம் மற் றும் ஊழியர் சேமலாப நிதியை வழங்குவதற்காக இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் பேலியகொடையிலுள்ள நிலத்தை விற்கவுள்ளதாக தெரி வித்துள்ளது.

இந்தக் காணியை ஆயிரம் கோடி ரூபாய்க்கு விற்பனை செய்வதற்காக அமைச்சரவை அனுமதி கோரும் ஆவணங்கள் ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட் டுள்ளன. பேலியகொடை மீன் சந்தைக்கு அருகிலுள்ள இந்த நிலப்பரப்பு 17 ஏக்கருக்கும் அதி கமானது" என இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபன தலைவர் ரத்னசிறி களுபஹன தெரிவித்தார்.

தேசிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆணைய ஊழி யர்களுக்கு கடந்த மாத சம்பள மாக ஒவ்வொருவருக்கும் கடந்த மே மாதம் ரூ. 7 ஆயிரம் ரூபாய் மாத்திரமே வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த னர்.

இதனிடையே இந்தத் திணைக் களத்தின் ஓய்வு பெறவுள்ள ஆயி ரத்து 100 ஊழியர்களுக்கு மட் டும் 260 கோடி ரூபாயை வழங்க வேண்டிய தேவையுள்ளது. பெருமளவிலான பண முறைகே டுகள் மற்றும் நல்லாட்சியில் மேற்கொள்ளப்பட்ட அதிகளவி லான ஆட்சேர்ப்பு காரணமா கவே இந்நிலைமை ஏற்பட்ட தாக திணைக்களத்தின் பணிப் பாளர் தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் படுகாயம்!

கொழும்பு, ஜுன் 20

கொழும்பு - வெல்லம்பிட்டி யில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் படு காயமடைந்துள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூடு நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றதாக வெல்லம்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியின் அருகே நின்றவரை மோட்டார் சைக்கிளில் வந்தவர் கள் துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பிச் சென்றனர். இதில் காயம டைந்தவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட் டார்.

காயமடைந்தவர் 41 வயது டைய கொலனாவை பிரதேசத் தைச் சேர்ந்தவராவார். துப்பாக் கிச் சூட்டுக்கான காரணம் இது வரையில் கண்டறியப்பட வில்லை.

பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# தூங்கிய கணவனுக்கு தீ வைத்த மனைவி!

கொழும்பு, ஜுன் 20

தூங்கிக் கொண்டிருந்த கணவனை தீ மூட்டி கொல்ல முயன்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு - மொரட்டு முல்லை - சமரகோன் காணி பிரதேசத்தில் நேற்று முன்தி னம் அதிகாலை 3 மணியள வில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு வேறு ஒருவரு டன் இரகசிய உறவு இருந்த தாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக கணவனுக்கும் மனைவிக்கும் முரண்பாடு ஏற் பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன் தினம் அதிகாலை கணவன் தூங்கிக் கொண்டிருந்த போது மனைவி அவருக்கு தீ வைத்துள் ளார். இதில் கணவன் இரு கால் களிலும் தீக் காயங்களுக்கு உள் ளானார். பாதிக்கப்பட்ட அவர் கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனையில் சிகிச்சைக் காக சேர்க்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண், கணவர் தன்னை கோடரியால் தாக்கினார் என்றும் தான் இறந் துவிட்டதாகக் கருதி தனக்குத் தானே அவர் தீ வைத்துக் கொண் டார் என்றும் கூறினாரென பொலிஸார் தெரிவித்தனர்.

# இலாப பணத்தை உயர்த்தாவிடின் விற்பனையிலிருந்து விலகுவோம்!

## அதிர்ஷ்ட இலாப சீட்டு விற்பனையாளர்கள்

கொழும்பு, ஜுன் 20

அதிர்ஷ்ட இலாப சீட்டு ஒன் றின் விலையை 40 ரூபாயாக உயர்த்த அரசு தீர்மானித்துள் ளது என்று தெரிவிக்கப்படுகி றது. இருப்பினும், அதிர்ஷ்ட இலாப சீட்டு விற்பனையாளர்க ளுக்கான தரகு பணத்தை அதிக ரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படவில்லை என அகில இலங்கை அதிர்ஷ்ட இலாப விநியோகஸ் தர் சங்கம் தெரிவிக்கிறது.

இந்நிலையில், தமக்கான தரகு கட்டணத்தை அதிகரிக்கா விட்டால், ஜூலை 7ஆம் திகதி முதல் விற்பனையில் இருந்து விலகுவோம் என்று அந்தச் சங் கம் தெரிவித்துள்ளது.

# இந்த வருடத்துக்குள் தேர்தல் ஒன்று நடக்கும்

## எல்லை நிர்ணய ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, ஜுன் 20

மாகாண சபைகள் அல்லது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களில் ஒன்று இந்த வருடம் நடைபெறும் என்ற நம்பிக்கை உள்ளதாக எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித் துள்ளார்.

அம்பலாங்கொடை பிரதே சத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே முன்னாள் தேர்தல்கள் ஆணையாளரும் எல்லை நிர்ணய ஆணைக்குழு வின் தலைவருமான மகிந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித் தார்.

உலக ஜனநாயக தினமான செப்ரெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கம் தீர்மா னம் எடுக்கும் என்று எதிர்பார்ப் பதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (ஐ)

# எந்தவகை எரிபொருளுக்கும் நாட்டில் தட்டுப்பாடு இல்லை

கொழும்பு, ஜுன் 20

நாட்டில் எவ்வித எரிபொ ருட்களுக்கும் தட்டுப்பாடு இல்லை என்று எரிசக்தி அமைச் சர் காஞ்சன விஜயசேகர தெரி வித்துள்ளார்.

இதன்படி, இலங்கை பெற் றோலிய கூட்டுத்தாபனம் மற் றும் லங்கா ஐ. ஓ. சி. எரிபொ ருள் நிரப்பு நிலையங்களில் 95 ஒக்ரைன் பெற்றோல் உட்பட வேறு எந்த பெற்றோலிய பொருட்களுக்கும் தட்டுப்பாடு இல்லை.

நாடளாவிய ரீதியில் 95 ஒக்



ரைன் ரக பெற்றோல் தட்டுப் பாடு நிலவுவதாக வெளியான செய்தியை தொடர்ந்து அமைச் சர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டின் நாளாந்த 95 ஒக் ரைன் ரக பெற்றோலின் தேவை 80-100 மெற்றிக் தொன். எரி பொருள் நிலையங்களில் போது மான அளவு இருப்புக்கள் உள் ளன. அத்துடன், தொடர்ச்சியாக விநியோகம் செய்யப்பட்டும் வருகின்றது.

மேலும், 9 ஆயிரம் மெற்றிக் தொன் 95 ஒக்ரைன் ரக பெற் றோல் நாளை மறுதினம் வியா ழக்கிழமை கப்பல் ஒன்று நாட்டை வந்தடையவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வட கொரியாவில் பசிக் கொடுமையால் உயிரை மாய்த்துக்கொள்ளும் மக்கள்!

வடகொரியாவில் உணவு பற்றாக்குறை இருப்பதாகவும், அண்டை வீடுகளில் வசிப்பவர்கள் பட்டினியால் வாடுவதாகவும் அந்நாட்டு பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

வட கொரிய மக்களுடன் பேசியபோது, 1990களில் இருந்து இதுபோன்ற நிலைமை படிப்படியாக மிகவும் மோசமடைந்ததாக அவர்கள் கூறுகின்றனர்.

2020இல், கொரோனா காரணமாக வட கொரிய அரசு அந்நாட்டு எல்லைகளை மூடியதைத் தொடர்ந்து அவசரத் தேவைகளுக்கான பொருட்களைக் கூட வாங்க முடியாத நிலையில் பொதுமக்கள் தவிக்கின்றனர். மேலும், பொதுமக்களின் நலன்களுக்கு எதிராக பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டு வருவதால் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், நாட்டு மக்களின் நலன்களில் அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக அந்நாட்டு அரசின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

வடகொரியாவில் வசிக்கும் பொதுமக்களில் மூன்று பேரிடம் இரகசியமாகப் பேசியபோது,எல்லைகள் மூடப்பட்ட பின் பட்டினியில் தவித்து பொதுமக்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், சாதாரண சட்ட மீறலுக்குக்கூட பொதுமக்கள் தூக்கிலிடப்படும் ஆபத்து இருப்பதாகவும் அதனால் எல்லோரும் ஒருவித அச்சத்துடனேயே வாழ்ந்து வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் மக்கள் தங்களுடைய குறைகளை வெளிப்படுத்தக்கூட முடியாத நிலையில் தவிப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

நாடு முழுவதும் பொதுமக்களுக்கு எந்த மாதிரியான ஆபத்துகள் நிலவுகின்றன என்பதை பொதுமக்களின் நேர்காணல்கள் காட்டுவதாக ‘வடகொரியாவில் மக்களுக்கான சுதந்திரம்” என்ற அமைப்பைச் சேர்ந்த சோகீல் பார்க் தெரிவித்துள்ளார். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அங்கிருந்து தப்ப முயலும் பொதுமக்களுக்கு இந்த அமைப்பு உதவி வருகிறது.



### உணவுப் பொருட்களை கடத்திச் செல்வதிலும் நெருக்கடி

நாட்டின் தலைநகரான ‘பியோங்யாங்கில்” வசிக்கும் பெண் ஒருவர், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் பட்டினியால் இறந்து போனது தமக்குத் தெரியும் என்கிறார்.

“அவர்கள் குடிப்பதற்காக நல்ல தண்ணீர் கொடுக்க நான் அவர்களின் வீட்டுக் கதவைத் தட்டினேன். ஆனால், அங்கே இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை” என்றார் ஜி யோன். பின்னர் அதிகாரிகள் அந்த வீட்டிற்குள் சென்று பார்த்தபோது, மூன்று பேரும் பிணமாகக் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். ஜி யோன் மற்றும் நமது நேர்காணலில் பங்கேற்றவர்களின் பாதுகாப்பு கருதி, அவர்களுடைய பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

சீனாவிலிருந்து எல்லைக்கு அருகே வசிக்கும் “சான் ஹேரா” என்ற கட்டுமானத் தொழிலாளியிடம் பேசினோம். உணவுப்பொருட்கள் மிகக் குறைவாக இருப்பதாகவும், தங்கள் கிராமத்தில் ஏற்கெனவே ஐந்து பேர் பசியால் இறந்துவிட்டதாகவும் அவர் கூறினார்.

“ஆரம்பத்தில், நான் கொரோனா தொற்றின் காரணமாக இறந்துவிடுவோமோ என்று பயந்தேன். ஆனால், அதன் பின் பசியால் இறந்துவிடுவோமோ என்ற பயம் தொடங்கியது” என்றார் அவர்.

நாட்டின் 26 மில்லியன் மக்களுக்குப் போதுமான உணவை வட கொரியாவால் ஒருபோதும் உற்பத்தி செய்ய முடியவில்லை. வட கொரியா 2020 ஜனவரியில் நாட்டின் எல்லைகளை மூடியது. சீனாவில் இருந்து உணவு தானியங்கள் இறக்குமதியும் நிறுத்தப்பட்டது. மறுபுறம், பயிர் உற்பத்திக்குத் தேவையான உரங்கள், இயந்திரங்களின் இறக்குமதியையும் நிறுத்தியது.



எல்லைகள் வேலிகள் மூலம் அடைக்கப்பட்டுள்ளன. யாரேனும் வேலிகளைக் கடக்க முயன்றால் துப்பாக்கியால் சுடவும் பாதுகாப்பு படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதனால் உணவு அல்லது இதர பொருட்களை கடத்திச் செல்வதிலும், சந்தைகளில் விற்பனை செய்வதிலும் மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது.

### பசிக் கொடுமையால் நடக்கும் தற்கொலைகள்

நாட்டின் வடக்குப் பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் மியோங் சுக் என்பவரும் எம்மோடு பேசினார். நாடு முழுவதும் உள்ள சந்தைகளில் நான்கில் மூன்று பங்கு தயாரிப்புகள் சீனாவில் இருந்து வந்ததாகத் தெரிவித்த அவர், இன்று சந்தையில் எல்லா கடைகளும் காலியாக உள்ளதாகத் தெரிவிக்கிறார்.

மற்றவர்களைப் போலவே, எல்லைக்கு அப்பால் இருந்து சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் தொழிலை அந்தப் பெண் செய்து வருகிறார்.

“இதுவரை எங்கள் வீட்டில் குடும்பத்துக்குத் தேவையான உணவு இருந்தது. ஆனால், இப்போது நிலைமை அப்படி இல்லை. அண்மையில், எங்கள் வீட்டுக்கு வந்த சிலர் ஒரு வேளை சாப்பாடு தரமுடியுமா என்று கேட்டனர் என்றால் நிலைமை எப்படி மாறியிருக்கிறது என்பது புரியும் என்கிறார்.

பியோங்யாங்கில் வசிக்கும் ஜி யோன், “பசிக் கொடுமையில் இருந்து தப்புவதற்காக சிலர் வீட்டில் தற்கொலை செய்து கொண்டனர். சிலர் இப்பகுதிகளில் உள்ள மலைகளுக்குச் சென்று அங்கே உயிரை மாய்த்துக்கொண்டனர். இங்கு அவர்கள் வாழ முடியாது என்பதை உணரும் போது வாழ்க்கையில் பிடிப்பில்லாத நிலை ஏற்படுகிறது,” என்றார்.

ஜி யோன் சொல்வதைக் கேட்கும்போது, அவரது குழந்தைகளுக்கு உணவளிப்பதுகூட மிகப்பெரும் சுமையாக இருப்பது போலவே தோன்றுகிறது. ஒருமுறை தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு சாப்பிட எதுவும் கிடைக்கவில்லை என்றும், தூக்கத்திலேயே பட்டினியால் உயிர் போய்விடுமோ என பயந்ததாகவும் அவர் கூறினார்.

1990களின் பிற்பகுதியில், வட கொரியாவில் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய வறட்சி நிலவியது. இதனால் சுமார் 30 லட்சம் பேர் பட்டினியால் உயிரிழந்தனர். அதேபோல் பசியில் சிக்கி பலர் இப்போது உயிரிழப்பதாக உறுதிப்படுத்தும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடகொரிய பொருளாதார நிபுணர் பீட்டர் வார்டு இதுகுறித்துப் பேசிய போது, ‘நடுத்தர வர்க்க மக்கள்கூட அடிக்கடி தங்கள் அண்டை வீட்டார் உயிரிழப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இது மிகவும் ஆபத்தானது,” என்றார்.

மேலும் பேசிய அவர், “இருப்பினும், பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் பட்டினியில் சிக்கித் தவிப்பதாகவோ, அல்லது ஒட்டுமொத்த சமூகமும் வீழ்ச்சியடைந்துவிட்டதாகவோ அஞ்சும் நிலை இதுவரை இல்லை. ஆனால் நிலைமை சரியில்லை என்பது மட்டும் உண்மை,” என்றார்.

வடகொரிய அதிபர், அணு ஆயுத திட்டத்திற்கு நிதி ஒதுக்குவதில் மட்டுமே அதிக கவனம் செலுத்தி வருகிறார். 2022இல் இங்கு 63 பாலிஸ்டிக் ஏவுகணை சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த சோதனைகளின் மொத்த மதிப்பு 500 மில்லியன் டாலர்கள். இது இங்குள்ள



ஜீன் மெக்கன்சி

உணவு தானிய பற்றாக்குறையைச் சமாளிக்கத் தேவையான அளவைவிட அதிகமான தொகையாகும்.

இது போல் பசிக்கொடுமை அந்நாட்டு மக்களை இப்படி வாட்டிக்கொண்டிருக்க, இன்னொருபுறம், பொது மக்கள் குற்றங்களில் ஈடுபடும்போது விதிக்கப்படும் தண்டனைகளை கடுமையாக்குதல், கட்டுப்பாடுகள் மிக்க புதிய சட்டங்களைக் கொண்டு வருதல் போன்ற நடவடிக்கைகளால், கடந்த மூன்றாண்டுகளில் மக்களின் அன்றாட வாழ்க்கையில் அரசின் கட்டுப்பாடு அதிகரித்துள்ளதாகவும் எம்மோடு பேசியவர்கள் தெரிவித்தனர்.

தென் கொரியாவின் புள்ளிவிவரங்களின் படி, கொரோனா பரவலுக்கு முன், ஒவ்வோர் ஆண்டும் வட கொரியாவிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் யாலு ஆற்றைக் கடந்து சீனாவிற்குள் நுழைந்தனர் எனத் தெரியவருகிறது.



இருப்பினும், அப்படி நாட்டை விட்டு வெளியேறுவது கூட இப்போது மிகவும் கடினமான ஒன்றாக மாறிவிட்டது என மியோங் சுக் கூறுகிறார். “குறைந்த பட்சம் அந்த நதியை நோக்கிச் சென்றால்கூட, கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் நிலை தற்போது காணப்படுகிறது. இதனால் அந்த ஆற்றைக் கடப்பதைப் பற்றிச் சிந்திக்கவே மக்கள் அஞ்சுகின்றனர்,” என்றார்.

கட்டடத் தொழிலாளியான சான் ஹேரா, சிலர் ரகசியமாக தூக்கிலிடப்பட்டதை தனது நண்பரின் மகன் பார்த்ததாகக் கூறினார். “இங்கு எங்களைப் போன்ற சாதாரண மக்கள் வாழ்வது நாளுக்கு நாள் கடினமாகி வருகிறது. ஒரு சாதாரண தவறுக்காகவே பொதுமக்கள் தூக்கிலிடப்படும் அவலம் நிலவுகிறது. ஒவ்வொரு நாளும் இங்கு மரணத்தை எதிர்பார்த்து வேதனையுடன் வாழ்கிறோம்,” என்றார்.



### வட கொரியாவில் நெருக்கடி நிலை இல்லை

இந்நிலையில், இந்த செய்திக்கு வடகொரிய அரசு பதில் அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளோம்.

இதற்கிடையே, “இக்கட்டான சூழ்நிலைகளிலும், இங்குள்ள அரசு, மக்களின் நலன்களைப் பாதுகாக்க முயல்கிறது,” என்று வடகொரிய அரசின் செய்தித் தொடர்பு அதிகாரி ஒருவர் கூறினார்.

‘பொதுமக்களைப் பாதுகாப்பதற்கே நாங்கள் எப்போதும் முன்னுரிமை அளித்து வருகிறோம். நீங்கள் கூறும் விவரங்கள் சரியானவை அல்ல,” என்கின்றனர் லண்டனில் உள்ள வடகொரிய தூதரக அதிகாரிகள். அவர்கள் மேலும் பேசுகையில், “வடகொரிய அரசுக்கு எதிராக செயல்படும் நபர்கள் உங்களுக்கு இதுபோன்ற தவறான தகவல்களை அளித்திருக்கலாம்,” என்கின்றனர்.

ஆனால், தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, வடகொரிய பொதுமக்கள் மூன்று விதமான கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது குறித்துப் பேசிய LINK அமைப்பைச் சேர்ந்த சொகீல் பார்க், “இங்கே உணவுப் பஞ்சம் தீவிரமாக ஏராளமான மக்களைப் பாதித்து வருகிறது. இன்னொரு புறம், பொதுமக்களின் சுதந்திரம் படிப்படியாக பறிக்கப் படுகிறது.

(09ஆம் பக்கம் பார்க்க)

# பல கோடி பேரின் வேலைக்கு உலை வைக்க போகும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்!

இன்றைய விஞ்ஞான உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம், நவீன வாழ்க்கையில் பல்வேறு தாக்கங்கள் மற்றும் மாற்றங்களை ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

எனினும், இந்த தொழில்நுட்பம் தவறான நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வாய்ப்பு உள்ளதாக அச்சம் தெரிவிக்கும் தொழில்நுட்ப வல்லுநர்கள் சிலர், மனிதர்கள் தற்போது பார்த்து வரும் பல்வேறு பணிகளுக்கு இது ஆபத்தை ஏற்படுத்த கூடும் என்றும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமானது ஒரு கணினியை கிட்டத்தட்ட ஓர் மனிதனை போலவே செயல்படவும், எதிர்வினை ஆற்றவும் அனுமதிக்கிறது.

மனிதனை போலவே ஓர் விஷயத்தை கணிப்பது மற்றும் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு, இவை தொடர்பான அதிக அளவிலான தகவல்களை கணினிகளுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அளிக்கலாம்.

கணினியை கொண்டு ஒரு பணியை முடிப்பதற்காக அவசியம் பின்பற்றப்பட வேண்டிய முறையான விதிமுறைகளின் தொகுப்பையும், தரவுகளையும் செயற்கை நுண்ணறிவு பெரிதும் நம்பியுள்ளது.

அலெக்சா மற்றும் சிரி போன்ற மெய்நிகர் முறையில் செயல்படும் தொழில்நுட்பங்களின் பின்னணியிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உள்ளது. இதனை கொண்டு ஸ்பாட்டிஃபை, யூடியூப் மற்றும் பிபிசி ப்ளேயரில் செயல்பாடுகளை வழிநடத்தலாம்.

அத்துடன் பயனாளர்களுக்கு எந்த பதிவைகளை அளிக்க வேண்டும் என்பது தொடர்பாக பேஸ்புக் மற்றும் ட்விட்டர் போன்ற சமூக வலைதளங்களுக்கும் இத்தொழில்நுட்பம் உதவலாம்.

வாடிக்கையாளர்களின் வாங்கும் பழக்கத்தை பகுப்பாய்வு செய்ய அமேசான் நிறுவனத்தை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அனுமதிக்கிறது. அத்துடன் போலி மதிப்பீடுகளை களையவும் இந்த நவீன தொழில்



நுட்பத்தை அமேசான் நிறுவனம் பயன்படுத்தி வருகிறது.

**ChatGPT** மற்றும் **snapchat's My AI** இரண்டும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இயங்கும் சக்தி வாய்ந்த பயன்பாடுகள் அல்லது செயலிகளாக கருதப்படுகின்றன. இந்த இரண்டு செயலிகளும் சமீபகாலமாக மிகுந்த கவனம் பெற்று வருகின்றன.

**ChatGPT** மற்றும் **snapchat's My AI** 'ஜெனரேட்டிவ் ஏஐ' எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப முறைக்கு சிறந்த உதாரணங்களாக கூறப்படுகின்றன.

அத்துடன் செயற்கை நுண்ணறிவானது, 'சாட்பாட்' எனப்படும் கணினி மென்பொருளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது எழுத்து வடிவ உரையாடல் வழியாக மனிதர்களுடன் தொடர்பு கொள்கிறது.

கேள்விகளுக்கு பதிலளிக்கவும், கதைகள் சொல்லவும், கணினி மென்பொருளை எழுதவும் இந்த செயலிகளை பயன்படுத்தலாம். ஆனால் இவ்விரண்டு செயல்களின்



பயன்பாடும் பயனர்களுக்கு சில நேரங்களில் தவறான முடிவுகளை அளிக்கலாம் என்கின்றனர் நிபுணர்கள்.

**செயற்கை நுண்ணறிவு குறித்த அச்சம் ஏன்?**

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை நிர்வகிக்க சில விதிகள் தற்போது நடைமுறையில் உள்ளன. ஆனால், இத் தொழில்நுட்பத்தின் விரைவான வளர்ச்சி ஆபத்தை விளைவிக்கக் கூடும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். 'ஏஐ' தொழில்நுட்பம் குறித்த ஆராய்ச்சிகள் உடனே நிறுத்தப்பட வேண்டும் என்றும் சிலர் வலியுறுத்துகின்றனர்.

'ஏஐ' தொழில்நுட்பத்தை உருவாக்கியவர்களில் ஒருவராக கருதப்படும் ஜெஃப்ரி ஹிண்டன் கூகுள் நிறுவனத்தில் தான் பார்த்து வந்த வேலையில் இருந்து கடந்த மாதம் விலகினார். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் விரைவில் மனிதனை விட புத்திசாலித்தனமாக மாறக்கூடும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

ஹிண்டனின் பணி விலகலை தொடர்ந்து, அமெரிக்காவில் செயல்பட்டு வரும் செயற்கை நுண்ணறிவின் பாதுகாப்பு குறித்து ஆராய்ந்து வரும் மையம் கடந்த மாதம் ஓர் முக்கியமான அறிக்கையை வெளியிட்டது. 25க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்களின் ஆதரவுடன் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை 'ஏஐ' தொழில்நுட்ப வளர்ச்சி குறித்து அச்சம் தெரிவித்துள்ளது.

சமூகத்தை சீர்குலைக்கும் நோக்கில் தவறான தகவல்களை உருவாக்க இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படலாம் என்று அந்த அறிக்கையில் நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். அத்துடன், இத்தொழில்நுட்பத்தால் மனிதர்களை விட இயந்திரங்கள் புத்திசாலித்தனமாக மாறக்கூடும் என்றும், அத்தகையதொரு மோசமான நிலை மனித குலத்தின் அழிவுக்கு வழிவகுக்கும் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

ஒரு சார்பு நிலை மற்றும் பாகுபாட்டைப் பெருக்கும் 'ஏஐ' இன் தொழில்நுட்பத் திறன் மிகவும் கவலை அளிக்கும் விஷயமாக இருக்கிறது என்று பிபிசியிடம் கூறினார் ஐரோப்பிய ஒன்றியத்தின் தொழில்நுட்ப தலைவரான மார்கிரேட் வெஸ்டேஜர்.

குறிப்பாக, கடன் விண்ணப்பங்கள் மீது முடிவெடுப்பது போன்ற விஷயங்களில் ஏஐ தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டால் அது பொதுமக்களின் வாழ்வாதாரத்தை நிச்சயம் பாதிக்கும் என்று வெஸ்டேஜர் கவலை தெரிவித்தார். அத்துடன் தேர்தல் போன்ற முக்கியமான விஷயங்களில் இத்தொழில்நுட்பம் நிச்சயம் ஆபத்தை விளைவிக்கும் என்றும் அவர் கூறினார்.

ஆனால், 'ஏஐ' தொழில்நுட்பத்தை நாம் வெறித்தனமாக எதிர்க்க வேண்டியதில்லை என்று கூறும் மார்தா லேன் ஃபாக்ஸ் உள்ளிட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள், அதன் திறன்கள் குறித்த நுட்பமான உரையாடல்கள் அதிகரிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

**'ஏஐ' தொடர்பாக தற்போதுள்ள விதிமுறைகள் என்ன?**

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப செயல்பாட்டை ஒழுங்குப்படுத்துவது தொடர்பாக உலக நாடுகளுக்கு இடையேயான மோதல் போக்கு நிலவி வருகிறது என்று தான் சொல்ல வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியம் முன்மொழிந்துள்ள 'ஏஐ' சட்டத்திற்கு ஆதரவாக ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர். இந்த தொழில்நுட்பம் தொடர்பாக கடுமையான பல்வேறு விதிமுறைகளை கொண்டுள்ள இந்த சட்டத்தை நிறுவனங்கள் பின்பற்ற வேண்டி வரும்.

2025 இல் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 'ஏஐ' தொழில்நுட்பத்தால் பொதுமக்களுக்கு அதிக பாதிப்பு, குறைவான பாதிப்பு ஏற்படும் நிலைகள் உள்ளிட்டவை குறித்து இந்தச் சட்டத்தில் முக்கிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆனால், இந்தச் சட்டம் ஐரோப்பிய நாடான பிரிட்டனுக்கு பொருந்தாது என அந்த நாட்டு அரசு அண்மையில் தெரிவித்திருந்தது. அத்துடன் 'ஏஐ' தொழில்நுட்பத்தின் எதிர்காலம் குறித்த தனது பார்வையை கடந்த மார்ச் மாதம் பிரிட்டன் தெளிவுபடுத்தி உள்ளது.

இத்தொழில்நுட்பம் தொடர்பாக தற்போதுள்ள விதிமுறைகள் குறித்து அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் கவலை தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், ஏஐ தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் போதெல்லாம், அதனை பயன்படுத்தும் நிறுவனங்கள் குறித்து பயனாளர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்ற தமது விருப்பத்தை சீனா தெரிவித்துள்ளது.

ஆனால், ஏஐ தொழில்நுட்பத்தை ஒழுங்குபடுத்தும் விதிமுறைகள் உலகளாவிய விவகாரமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார் வெஸ்டேஜர், குறைந்தபட்சம், இந்த விஷயத்தில் ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளுக்கு இடையே யாவது ஒருமித்த கருத்து உருவாக்க வேண்டும் என்று விரும்புவதாகவும் அவர் கூறுகிறார்.

**எந்தெந்த வேலைகளுக்கு ஆபத்து?**

ஏஐ தொழில்நுட்பம் உலகளாவிய பணி சூழலில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என்று கூறப்படும் நிலையில். இதனால் எந்தெந்த வேலைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் கலந்த கேள்வியும் எழுந்துள்ளது.

உலகம் முழுவதும் 300 மில்லியன் நபர்கள் தற்போது முழுநேரமாக செய்துவரும் பணிகளை 'ஏஐ' தெரில்நுட்பம் முற்றிலுமாக மாற்றி அமைக்கும் எனவும், இந்தப் பணிகள் அனைத்தும் இயந்திரமயம் ஆக்கப்படும் என்றும் முதலீட்டு வங்கியான **Goldman Sachs** அண்மையில் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை எச்சரித்துள்ளது. இந்த எண்ணிக்கை, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் தற்போது அனைத்து விதமான பணிகளை மேற்கொண்டு வரும் மனிதர்களின் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிர்வாகம் சட்டம், கட்டடக் கலை உள்ளிட்ட துறைகள் சார்ந்த பணிகளுக்கு, 'ஏஐ' தொழில்நுட்பத்தால் பாதிப்பு ஏற்படும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் மருத்துவம் மற்றும் அறிவியல் துறைகளில் ஏற்கனவே 'ஏஐ' தொழில்நுட்பம் பயன்பாட்டில் உள்ளது. மார்பக புற்று நோயை அடையாளம் காணதங்களுக்கு உதவும் வகையில் மருத்துவர்கள் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

நுண்ணுயிர்கள் எதிர்ப்புக்கான புதிய மருந்துகளை (ஆன்டிபயாடிக்) கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி பணிகளில் விஞ்ஞானிகள் இத்தொழில்நுட்பத்தை கையாண்டு வருகின்றனர். உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7 சதவீதம் அதிகரிக்க 'ஏஐ' தொழில்நுட்பம் வழிவகுக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. ●

# வட கொரியாவில் பசிக் கொடுமையால்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுபுறம், இங்கிருந்து தப்பிச் செல்ல முடியாத நிலைக்கு பொதுமக்கள் தள்ளப்பட்டுள்ளனர், ஆகவே, வடகொரிய பொதுமக்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அடக்குமுறைகளையும், கொடுமைகளையும் அனுபவித்து வருகின்றனர்," என்று கூறினார்.

"கண்காணிப்பு மற்றும் அடக்குமுறையின் காரணமாக, மக்கள் ஒருவருக்கொருவர் நம்பிக்கையை இழக்கிறார்கள். 2020 டிசம்பரில் கொண்டுவரப்பட்ட புதிய சட்டத்தின் கீழ் நானும் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். புதிய சட்டம், வெளிநாட்டு திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் பாடல்களைக் கேட்பதைக்கூட தடை செய்கிறது. குறிப்பாக, வெளிநாட்டு தகவல்களை இங்கு பகிர்ந்துகொண்டதாக நிரூபிக்கப்பட்டால் மரண தண்டனைகூட விதிக்க முடியும் என்ற அளவுக்கு இந்த சட்டம் வழிவகைகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறது," என்று ஜி யோன் கூறினார்.

வடகொரிய தூதரக அதிகாரியாகப் பணிபுரிந்து தற்போது வெளிநாட்டில் குடியேறியுள்ள ரூ ஹியூன் வூ பேசுகையில், வெளிநாட்டு செல்வாக்கை கட்டுப்படுத்தும் நோக்கில் இயற்றப்பட்டுள்ள புதிய சட்டங்கள் எவ்வளவு கடுமையானவை என்பதைப் பார்க்கும்போது மிகவும் அதிர்ச்சியாக உள்ளது என்றார். மேலும், "மக்கள் தாங்கள் வாழும் சூழலை முழுமையாகப் புரிந்து கொண்டால், அது எழுச்சியாக மாறும் நிலை உருவாகும் அல்லது புரட்சி வெடித்துவிடும் என அதிபர் கிம் ஜோங் உன் அஞ்சுவதாக" தெரிவித்தார்.

வடகொரிய அரசின் மீது அதீத நம்பிக்கை கொண்ட மக்களிடையேகூட தற்போது நம்பிக்கை குறைந்து வருவதாகவும், அவர்களிடம் பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பலர் தெரிவித்தனர்.

"கொரோனா பரவலுக்கு முன், சிலர் கிம் ஜாங் உன் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால் இப்போது நாட்டு மக்களில் பெரும்பாலானோர் பொறுமையிழந்து விட்டதாகவே தெரிகிறது," என்கிறார் மியோங் சுக். ●



யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'மக்கள் கலை இலக்கிய முன்னோக்கில் ஈழத் தமிழ் சிறுகதைகள்' என்ற தலைப்பிலான மாதாந்த ஆய்வரங்கில் பங்கேற்றவர்களை படத்தில் காணலாம்.

# 3,265 கடவுச்சீட்டுகளுக்கு இணையம் மூலம் விண்ணப்பம்!

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட இணைய வழி கடவுச்சீட்டு முறைமையின் கீழ் இதுவரை 3 ஆயிரத்து 265 கட வுச்சீட்டு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக் களம் தெரிவித்துள்ளது.

நேரடியாக கடவுச்சீட்டை பெற செல்பவர்களிடம் இருந்து சட்டவிரோதமாக பணத்தை பெறும் சம்பவங்கள் அண்மைக காலத்தில் பதிவாகியிருந்தது.

அதனை தவிர்ப்பதற்காக வும், பொதுமக்களுக்கான சேவையை இலகுபடுத்தவும், இணைய வழியில் விண்ணப்பம் கோரல் திட்டம் கடந்த வாரத் தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த முறைமையின் ஊடாக கடவுச்சீட்டுக்களை விண்ணப்ப தாரர்கள் தங்களது வீடுகளுக்கே பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை, ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் முறைப் பாடு அளிக்க அல்லது கணினி தொடர்பான தகவல்களைப் பெற, 1962 என்ற அவசர இலக் கத்திற்கு தொடர்பு கொள்ள லாம் என்று குடிவரவு - குடிய கல்வு திணைக்களம் தெரிவித் துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 51 பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத் தின் உப அலுவலகங்கள் இணையவழியில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்த நபர்களின் கைரேகைகளை ஏற்றுக்கொள்ளும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என் றும் தெரிவிக்கப்பட்டது.(ஐ)

# இராணுவத்தை சரியான அளவில் பேணுவது படைக் குறைப்பு அல்ல!

## பாதுகாப்பு அமைச்சின் செயலர்



கொழும்பு, ஜூன் 20

இராணுவத்தினரை 'சரி யான அளவில் பேணுதல்' மற் றும் 'சில கிராமப் பகுதிகளில் இருந்து இராணுவ தளங்களை அகற்றுவது' தேசிய பாதுகாப்பு - பிராந்திய பாதுகாப்பு மற்றும் புனித இடங்களுக்கு அச்சுறுத் தலை ஏற்படுத்தாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர் பான துறைசார் மேற்பார்வைக் குழு கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடிய போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் தொடர் பாடல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இராணுவத்தை சரியான அளவில் 'பேணுதல்' என்பதன் அர்த்தம் இராணுவத்தின் எண்ணிக்கையை குறைப்பதல்ல என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விளக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், 'சரியான அளவில் பேணுதல்' என்றால் என்ன என்பதை விளக்கவில்லை.

இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்ன கோன், பாராளுமன்ற உறுப்பி னர்களான ஜோன்ஸ்டன் பெர் னாண்டோ, சந்திம வீரக்கொடி, யு.கே.சுமித் உடுகும்புர, கலா நிதி மேஜர் பிரதீப் உந்துகொட, மேஜர் சுதர்ஷன தபிடிய, நிமல் ஆகியோர் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் கண் காணிப்புக் குழுவின் தலைவர் தலைமையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சரத் வீரசேகர, நிமல் பியதிஸ்ஸ மற்றும் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சுக்களின் செயலாளர் கள், அந்தந்த அமைச்சுகளின் சிரேஷ்ட அதிகாரிகள், படை களின் பிரதானி, முப்படை களின் தளபதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நாட்டில் இனங்களுக்கிடை யில் நல்லிணக்கத்தை ஏற்ப டுத்துவதில் கவனம் செலுத்திய குழு, தீவிரவாதத்தை தோற்க டிக்க பாடுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதாக பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்கள பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்கள பதில் பணிப்பா ளருமான எச். ஈ. ஜனகாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இராணு வத்தினருக்கு விதிக்கப்பட் டுள்ள சர்வதேச பயணத் தடையானது இராணுவத்தின ரின் மன உறுதியை பாதிக்கும் என்பதால் அதற்கு எதிராக நிற்க வேண்டியதன் அவசியத்தை தேசிய பாதுகாப்பு தொடர் பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை இனப்படுகொலை செய்துள்ளதாக கனடிய நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத் திற்கு எதிராக எவ்வாறு எதிர்ப்பை தெரிவிப்பது என்பதை தெரிவிக்குமாறு வெளிவிவகார அமைச்சிடம் குழு கோரியுள்ளது. (ஐ)

# 1,227 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது

கொழும்பு, ஜூன் 20

எம்பிலிபிட்டியில் 1,227 கிலோ கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால்தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வளவு பெருந்தொகை கஞ்சா தென்னிலங்கையில் கைப்பற்றப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)






# மயிலத்தமடு மாதவனையில் சினைமாடு அறுத்து கொடூரம்

மட்டக்களப்பு, ஜூன் 20

**மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் நிலத்தில் மேய்ச்சலுக்கு சென்ற கன்றுதாச்சி மாட்டை அறுத்து கொடூரம் இழைக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

தமிழ் மக்களுக்கு சொந்தமான மாதவனை மேய்ச்சல் தரையில் சிங்கள மக்கள் அத்துமீறி குடியேற்றப்பட்டுள்ளனர். இது தொடர்பில் இரு சாராரும் அடிக்கடி முரண்பட்டு வருகின்றனர். இந்த நிலையில், மேய்ச்சலுக்கு செல்லும் தமிழரின் மாடுகள் வெட்டியும் சுட்டும் கொல்லப்படுகின்றன என்று முறைப்பாடுகள் செய்யப்படுவது வழமையாக உள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் கன்றுதாச்சி மாட்டை காணவில்லை என உரிமையாளர் தேடிச் சென்றார். இந்த நிலையில் அந்தப் பசு மாடு இறைச்சிக்காக வெட்டிக் கொல்லப்பட்ட நிலையில் அடையாளம் காணப்பட்டது.

இது குறித்து பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில், அடிக்கடி தொடரும் இந்த அடாவடி நடவடிக்கையை நிறுத்துவதற்கு அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# தம்பலகாமம் பிரதேசத்தில் நாளை நடமாடும் சேவை

திருகோணமலை, ஜூன் 20

திருகோணமலை - தம்பலகாமம் பிரதேச செயலகமும், தம்பலகாமம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவும் இணைந்து நாளை புதன்கிழமை நடமாடும் சேவையை நடத்தவுள்ளன.

இந்த நடமாடும் சேவை காலை 9 மணி முதல் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நடைபெறும் என்று பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரனையுடன் இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மட்டக்களப்பு, அம்பாறையில் சர்வதேச யோகா தின நிகழ்வு

நிந்தவூர், ஜூன் 20

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் யோகா விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

சர்வதேச யோகா தினமான நாளை புதன்கிழமை யோகா விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் யோகா செயல் விளக்க நிகழ்வு சுதேச மருத்துவ திணைக்களம், தொற்றா நோய் தடுப்புப் பிரிவு என்பவற்றின் ஆதரவுடன் நடைபெறவுள்ளது.

மனித நேயத்துக்கான யோகா எனும் தொனிப்பொருளில், மேற்படி விழிப்புணர்வு யோகா பயிற்சி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் புதன்கிழமை காலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சுகுணன் குணசிங்கம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சுமார் ஆயிரம் பங்கேற்பாளர்கள் கலந்து கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களமும், அம்பாறை மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள யோகா விழிப்புணர்வு நிகழ்வு நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுரவிக்கிரம நாயக்கவின் வழிகாட்டலுடனும் பங்கேற்புடனும் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு, காரைதீவு விபுலாநந்தா மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-06)

# காத்தான்குடி பிரதேசத்தில் டெங்கு விழிப்புணர்வூட்டல்



காத்தான்குடி, ஜூன் 20

காத்தான்குடியில் டெங்கு விழிப்புணர்வு, களத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

காத்தான்குடி டெங்கு தடுப்பு செயலணியின் தீர்மானத்துக்கு அமையவும் ஆலோசனையிலும் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

காத்தான்குடி பிரதேச செயலாளரும் காத்தான்குடி டெங்கு ஒழிப்பு செயலணியின் தலைவருமான உதய சிறீதர் மற்றும் காத்தான்குடி சுகாதார மருத்துவ அதிகாரி டாக்டர் நசிர்தீன் ஆகியோரின் வழிகாட்டலில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த திட்டத்தின் கீழ் புதிய காத்தான்குடி தெற்கு 167 சி கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்று திங்கட்கிழமை வீடு வீடாக டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் கிராமத்திலுள்ள பொது மக்களுக்கு டெங்கு ஒழிப்பு தொடர்பாக விழிப்பூட்டும் கூட்டமும் நடைபெற்றது. (ஐ)

# வீதியோர மீன் விற்பனையை நிறுத்துமாறு எச்சரிக்கை!

நிந்தவூர், ஜூன் 20

பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் விதமாக சட்டவிரோத மீன் விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதான வீதிகள் நாற்சந்திகள் உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் அண்மைக்காலமாக சட்டவிரோத மீன் விற்பனை நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.



இதனை அடுத்து நிந்தவூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, நிந்தவூர் பிரதேச சபை, நிந்தவூர் பொலிஸ் நிலையம் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் நேற்று எச்சரிக்கை அறிவித்தலை ஒட்டியுள்ளன.

இந்த துண்டுப்பிரசுரத்தில் நிந்தவூர் பிரதேச சபை சட்டவிரோத மீன் விற்பனை நடவடிக்கையை மீறுவோருக்க எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

# சௌபாக்கியா திட்டத்தில் மூன்று வீடுகள் கையளிப்பு



அக்கரைப்பற்று, ஜூன் 20

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாலமுனை மற்றும் ஒலுவில் கிராமங்களில் அமைக்கப்பட்ட சமுர்த்தி ‘சௌபாக்கியா’ திட்டத்தில் அமைக்கப்பட்ட 3 வீடுகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அஹமது சாபீர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந் நிகழ்வில் அதிதியாக சமுர்த்தி மாவட்ட பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸ் கலந்து கொண்டார். (ஐ)

# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக விழிப்புணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு, ஜூன் 20

மட்டக்களப்பு - வம்பிவெட்டுவானில் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வை வேர்ள்ட் விஷன் நிறுவனத்தின் பங்காளி நிறுவனமான வண்ணத்துப்பூச்சி சமாதானப் பூங்கா நிறுவனம் முன்னெடுத்தது.

‘வாருங்கள் தேசமாக ஒன்றிணைந்து சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு முற்றுப்புள்ளி வைப்போம்’ எனும் கருப்பொருளில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.



சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான விழிப்புணர்வு ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட்டன.

திட்ட இணைப்பாளர் அமுதராஜாவின் ஒழுங்கமைப்பில் இவ் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. (ஐ)

ஈழநாடு



*எல்லைகளில் படை, ஆயுதம் குவிப்பு*

# பெலாரஸ் - உக்ரைன் இடையே போர் பதற்றநிலை அதிகரிப்பு!

கீவ், ஜூன் 20

**பெலாரஸ் நாட்டுக்கு மேலும் அணுகுண்டுகளை அனுப்ப ரஷ்யா திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதற்கு பதிலடியாக உக்ரைன் தனது படைகளை பெலாரஸ் எல்லை நோக்கி அதிகளவில் அனுப்பியுள்ளது. இதனால், இரு நாடு களிடையேயும் போர் பதற்ற நிலை அதிகரித்துள்ளது.**



இதனிடையே, ரஷ்ய வெளியுறவு துறை அமைச்சர் அலெக்சி போலிஷ்சுக் அளித்துள்ள பேட்டி ஒன்றில், இது ரஷ்யாவின் படைத் திறனை ஆய்வு செய்யும் முயற்சியாக உள்ளது என்று சாடியுள்ளார்.

உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கையை கடந்த ஆண்டு பெப்ரவரியில் ஆரம்பித்தது. இந்தப் போர் ஒரு வருடத்துக்கும் மேலாக நீடித்து வருகிறது.

இந்த நிலையில், உக்ரைனின் எல்லையை ஒட்டிய பெலாரஸ் நாட்டில் திறன் வாய்ந்த அணு ஆயுதங்களை குவிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக அணு ஆயுதங்களை அந்நாட்டுக்கு ரஷ்யா அனுப்ப முடிவு செய்தது.

இதற்கு பதிலடியாகவே உக்ரைன் தனது படைகளை பெலாரஸ் எல்லையை நோக்கி நகர்த்தியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பிரேசிலில் புயல் தாக்கம்; 13 பேர் பலி; 20 பேர் மாயம்

பிரேசிலியா, ஜூன் 20

பிரேசில் நாட்டை தாக்கிய புயல் காரணமாக 13 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கான வீடுகள் சேதம் அடைந்துள்ளன. ஏராளமான மரங்கள் வேரோடு சாய்ந்தன.

அத்துடன், கனமழை காரணமாக வெள்ளத்தில் சிக்கிய 3,713 பேரை மீட்பு குழுவினர் மீட்டுள்ளனர். 20இற்கும் மேற்பட்டவர்களை வெள்ளம் அடித்து சென்றது. அவர்கள் ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டனர்.

எனினும், இந்த புயலால் 4 மாத குழந்தை உள்பட 13 பேர் பலியாகினர். மேலும் 20 பேரின் நிலைமை என்னவென்று தெரியவில்லை. அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது.

ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்துவிட்டனர். அவர்கள் அங்குள்ள விளையாட்டு மைதானங்களில் தற்காலிமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# நீரை அதிகம் எடுத்ததால் கிழக்கே சாய்ந்தது பூமி!

## புவியியளலாளர்கள் அதிர்ச்சி தகவல்

நியூயோர்க், ஜூன் 20

பூமியில் இருந்து மனிதர்களால் அளவுக்கு அதிகமாக நிலத்தடி நீர் எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் நாம் வாழும் பூமி 1993 மற்றும் 2010 ஆண்டுகளுக்கு இடையில் கிட்டத்தட்ட 80 சென்ரிமீற்றர் கிழக்கே சாய்ந்துள்ளது என்று விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக பூமியின் காலநிலையில் பெரிய பாதிப்புகள் ஏற்படலாம் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

ஜோபிசிக்கல் ரிசேர்ச் லெற்றர்ஸ் என்ற புவி சார் ஆய்விதழில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தகவல்படி, 1993ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை மட்டும் 2,150 ஜிகா தொன் (100 கோடி மெற்றிக் தொன் ஒரு ஜிகா தொன் ஆகும்) நிலத்தடி நீர் மனிதர்களால் உறிஞ்சப்பட்டுள்ளது. இது 6 மில்லிமீற்றருக்கும் அதிகமான கடல் மட்ட உயர்வுக்கு சமமாகும்.

நிலத்தடி நீர்மட்டம் குறைவது பூமியின் சுழற்சியை மாற்றுவதாக 2016ஆம் ஆண்டு ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டனர். ஆனால், தற்போதுவரை இந்த சுழற்சி மாற்றங்களுக்கு நிலத்தடி நீரின் குறிப்பிட்ட பங்களிப்பு ஆராயப்படவில்லை.

1993 முதல் 2010 வரையிலான காலகட்டத்தில், மேற்கு வட அமெரிக்கா மற்றும் வடமேற்கு இந்தியா ஆகிய நாடுகளில், மத்திய அட்ச ரேகைகளில் அதிகளவு நீர் மறுபகிர்வு செய்யப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

இதனால், பூமியின் சுழற்சி பெரிதும் மாறியுள்ளதாகவும். இதன் மூலம் பூமியின் பல்வேறு பகுதியில் காலநிலையில் பெரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. ஆனால், இதற்கு நிலத்தடி நீர் மட்டம் குறைவு எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பது குறித்த முழுமையான தரவுகள் இல்லை.

பூமியின் சுழற்சி துருவமானது பொதுவாக ஒரு வருடத்துக்குள் பல மீற்றர்கள் மாறுவதால் நிலத்தடி நீரை எடுப்பதன் காரணமாக ஏற்படும் மாற்றங்கள் பருவங்களை மாற்றுவதற்கான எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

# கிரீஸ் அகதிகள் படகு விபத்து நூற்றுக்கணக்கானோர் மரணம்?

## உண்மையை கிரீஸ் மறைப்பதாக சாடல்


லண்டன், ஜூன் 20

கிரீஸ் நாட்டில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற படகு விபத்தில் பல நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று நிறுவுவதற்கான ஆதாரங்களை பி. பி. சி. வெளியிட்டுள்ளது.

இந்தப் படகு விபத்தில் 79 பேரே உயிரிழந்தனர் என்று கிரீஸ் நாட்டு கடலோர காவல் படை அறிவித்திருந்தது. ஆனால், கவிழ்ந்த மீன்பிடி படகில் 500 இற்கும் மேற்பட்டவர்கள் பயணித்திருந்தனர். இதில், நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்களும் இருந்தனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐரோப்பா நோக்கிய புலம்பெயர்வின்போது இடம்பெற்ற இந்தப் படகு விபத்தை கிரீஸ் நிர்வாகம் சரயான முறையில் கையாளவில்லை என்று ஐ. நா. தெரிவித்துள்ளது.

புலம்பெயர் படகு மூழ்கிய பின்னர் குறிப்பிட்ட பகுதியிலேயே மீட்பு படை செயல்பட்டது. ஆனால், சில மணி நேரத்தின் பின்னர்தான் மீட்பு பணியை வேறு இடங்கள் நோக்கி திருப்பியது என்று அறிய வருகின்றது.



படகு மூழ்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் கிரீஸ் அதிகாரிகளால் எடுக்கப்பட்ட படம்

இதனிடையே, இந்தப் படகு விபத்தில் உயிரிழந்தவர்களில் 300 பேர் வரையானோர் பாகிஸ்தான் நாட்டவர்கள் என்று அந்த நாட்டு அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். (ஐ)

# சீன, அமெரிக்க வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்து பேச்சு

பீஜிங், ஜூன் 20


சீனா சென்றுள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ரனி பிளிங்கன், சீன வெளியுறவு அமைச்சர் கின் கொங்கை ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேசினார்.

இரு தரப்பு உறவு வீழ்ச்சி கண்டிருக்கும் நிலையில், இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

வர்த்தக விவகாரம், தாய்வான் விவகாரம் உள்ளிட்டவற்றில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதன் காரணமாக சீன நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்தது.

கொரோனா தொற்று பரவலும், உக்ரைன் - ரஷ்யா போரில் ரஷ்யாவுக்கு சீனா தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருவதும் அமெரிக்கா - சீனா இடையேயான நல்லுறவை மேலும் மோசமாக்கின.

இந்நிலையில், சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ரனி பிளிங்கன், அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் கின் கொங்கை தலைநகர் பீஜிங்கில் ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேசினார். அப்போது, இருவரும் பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



எனினும், அவர்கள் விவாதித்த விசயங்கள் குறித்த அதிகாரபூர்வ அறிக்கையை இரு தரப்பும் வெளியிடவில்லை.



# யூரோ கிண்ண உதைபந்து; போர்த்துக்கல் வெற்றி!

லிஸ்பன், ஜூன் 20

யூரோ கிண்ண உதைபந்தாட்ட தொடருக்கான தகுதி சுற்று ஆட்டம் போர்த்துக்கல்லின் தலைநகர் லிஸ்பன் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் போர்த்துக்கல் - பொஸ்னியா ஹெர்ஸகோவினா அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் போர்த்துக்கல் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. புருனோ பெர்னாண்டஸ், 77 மற்றும் 90ஆவது நிமிடத்திலும், பெர்னாண்டோ சில்வா 44ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். (ஐ)



# ரூ. 3,900 கோடியை கடந்தது கோலியின் சொத்து மதிப்பு!

புதுடில்லி, ஜூன் 20

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான விராட் கோலியின் சொத்து மதிப்பு ஆயிரம் கோடி இந்திய ரூபாயை - இலங்கை மதிப்பில் சுமார் 3 ஆயிரத்து 900 கோடி ரூபாயை தாண்டி இருக்கும் என தகவல் வெளியாகி உள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி, உலகின் மிகவும் பிரபலமான விளையாட்டு வீரர்களில் ஒருவராகவும் திகழ்கிறார். சமூக வலைதளமான இன்ஸ்ராகிராமில் விராட் கோலியை 252 மில்லியன் பேர் பின் தொடர்கின்றனர். இந்நிலையில் அவரின் சொத்து மதிப்பு குறித்து 'ஸ்டாக் குரோ' என்ற நிறுவனம் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி விராட் கோலி சொத்துகளின் நிகர மதிப்பு 1,050 கோடி இந்திய ரூபாயாகும். இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் வீரர்களில் அதிக வருமானம் ஈட்டுபவராக உள்ளார் விராட் கோலி.

34 வயதான விராட் கோலிக்கு பல்வேறு வழிகளில் வருமானம் கிடைக்கிறது. இந்திய கிரிக்கெட் வாரியத்தின் ஒப்பந்த பட்டியலில் விராட் கோலி 'ஏ பிளஸ்' பிரிவில் உள்ளார். இதன் மூலம் ஆண்டுக்கு ரூ.7 கோடி சம்பளம் கிடைக்கும். இதுதவிர ஒரு டெஸ்ட் போட்டிக்கு ரூ. 15 இலட்சமும், ஒருநாள் போட்டி ஒன்றுக்கு ரூ. 6 இலட்சமும், டி 20 போட்டிக்கு ரூ. 3 இலட்சமும் வருமானம் கிடைக்கிறது. மேலும், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியுடனான ஐ. பி. எல். ஒப்பந்தத்தின் மூலம் ஆண்டுதோறும் ரூ.15 கோடி சம்பாதிக்கிறார்.

இதை தவிர்த்து பல நிறுவனங்களை நடத்துகிறார். அத்துடன், கோலி 18 நிறுவனங்களுக்கும் மேல் விளம்பர தூதராக உள்ளார். ஒரு விளம்பர படப்பிடிப்புக்காக ஆண்டுக்கு ரூ.7.50 முதல் 10 கோடி வரை கட்டணம் வசூலிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்துக்களின் பெரும்போர் வெள்ளியன்று ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 20

இந்துக்களின் பெரும்போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி - கொழும்பு இந்துக் கல்லூரி அணிகளின் பெருந்துடுப்பாட்ட போட்டி எதிர்வரும் வெள்ளி, சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி கொழும்பு பி. சரவணமுத்து ஓவல் சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

1982இல் ஆரம்பமான இந்துக்களின் பெரும்போர் கிரிக்கெட் போட்டி நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மையால் தடைப்பட்டது. பின்னர், மீளவும் தொடங்கிய இந்தப் போட்டி கோவிட் தொற்றுப் பரவலால் மீளவும் தடைப்பட்டது. இந்நிலையில், இந்தப் போட்டியை தடையின்றி தொடர இரு கல்லூரி நிர்வாகங்களும் நேற்று முன்தினம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.




கொழும்பு தமிழ் யூனியன் கிரிக்கெட் மற்றும் அத்லெட்டிக் கழக கேட்போர் கூடத்தில் இந்த உடன்படிக்கை கைச்சாத்தானது.

யாழ். இந்து கல்லூரி சார்பாக அதிபர் ரட்ணம் செந்தில்மாறன், பழைய மாணவர் சங்க கொழும்பு கிளைத் தலைவர் என். பிரேம்குமார், கொழும்பு இந்து கல்லூரி சார்பாக அதிபர் கே. நாகேந்திரா, பழைய மாணவர் சங்க விளையாட்டுத்துறை பிரிவு தலைவர் மருத்துவர் ஜீ. ரஜீவ் நிர்மலசிங்கம் ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள இந்துக்களின் பெரும்போர் துடுப்பாட்ட போட்டி 12ஆவது போட்டியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆஷஷ் டெஸ்ட் தொடர்; ஆஸி. 386 ஓட்டங்கள்!

பர்மிங்ஹாம், ஜூன் 20

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 386 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

தொடக்க வீரரான உஸ்மான் கவாஜா 141 ஓட்டங்கள் விளாசினார். பர்மிங்ஹாமில் நடைபெற்று வரும் இந்த போட்டியில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 393 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து விளையாடிய அவுஸ்திரேலிய அணி 2ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 94 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 311 ஓட்டங்கள் எடுத்தது. டேவிட் வோர்ணர் 9, மார்னஷ் லபுஷான் 0, ஸ்டீவ் ஸ்மித்16, டிராவிஸ் ஹெட் 50, கமரூன் கிறீன் 38 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். உஸ்மான் காவாஜா 126, அலெக்ஸ் கேரி 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் 3-வது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய அவுஸ்திரேலிய அணி 116.1 ஓவரில் 386 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

அலெக்ஸ் கேரி 99 பந்துகளில், ஒரு சிக்ஸர், 10 பௌண்ட்ரிகளுடன் 66 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜேம்ஸ் அண்டர்சன் பந்தில் ஆட்டமிழந்தார்.

உஸ்மான் கவாஜா 321 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 14 பௌண்ட்ரிகளுடன் 141 ஓட்டங்கள் விளாசிய நிலையில் ஒல்லி றொபின்சன் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.




6ஆவது விக்கெட்டுக்காக உஸ்மான் கவாஜா, அலெக்ஸ் கேரி இணை 118 ஓட்டங்கள் சேர்த்தது. இதைத் தொடர்ந்து களமிறங்கிய நதன் லயன் 1, ஸ்கொட் போலண்ட் 0, பட் கம்மின்ஸ் 38 ஓட்டங்களில் வெளியேறினர்.

இங்கிலாந்து தரப்பில் ஸ்ருவர்ட் பிரொட், ஒல்லி றொபின்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், மொயின் அலி 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

7 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய இங்கிலாந்து அணி 10.3 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 28 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. போப் மற்றும் ரூட் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ஐ)

# உலகக் கிண்ண தகுதி சுற்று; சிம்பாம்வே முதல் வெற்றி!

ஹராரே, ஜூன் 20

ஐ. சி. சி. 50 ஓவர் உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதி சுற்று தொடரில் சிம்பாப்வே தனது முதல் ஆட்டத்தில் நேபாளம் அணியை 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

ஹராரேவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பாட்டம் செய்த நேபாளம் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 290 ஓட்டங்கள் குவித்தது.

அதிகபட்சமாக தொடக்க வீரரான குஷால் புர்டெல் 95 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 13 பௌண்ட்ரிகளுடன் 99 ஓட்டங்கள் விளாசினார். மற்றொரு தொடக்க வீரரான ஆசிப் ஷேக் 100 பந்துகளில், 7 பௌண்ட்ரிகளுடன் 66 ஓட்டங்கள் சேர்த்தார். சிம்பாப்வே அணி தரப்பில் ரிச்சர்ட் நகரவா 4, வெலிங்டன் மசகட்ஸா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.



291 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணியானது 44.1 ஓவரில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றி பெற்றது. கிரெய்க் எர்வின் 128 பந்துகளில், ஒரு சிக்ஸர், 15 பௌண்ட்ரிகளுடன் 121 ஓட்டங்களும், சீன் வில்லியம்ஸ் 70 பந்துகளில், 13 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 102 ஓட்டங்களும் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தனர். முன்னதாக ஜாய்லார்ட் கும்பி 25, வெஸ்லி மாதேவேரே 32 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

## அரசியல் எதிர்காலத்துக்காக அரசு இன, மதமோதலைதூண்டுகின்றது

### ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார

கொழும்பு, ஜூன் 20

அரசாங்கம் தனது அரசியல் எதிர்காலத்துக்காக இன, மத மோதல்களை தூண்டுகின்றது என்று ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் மக்கள் சந்திப்பு ஒன்றில் பங்கேற்ற அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டை 75 வருடங்களாக அழித்துள்ள தலைவர்களுக்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகத்தின் அடிமட்ட மக்கள் ஐக்கியப்பட்டுள்ளனர் - ஒன்றிணைந்துள்ளனர். இதன்காரணமாக அச்சமடைந்துள்ள அரசாங்கம் அவர்களைப் பிரிக்க முயல்கின்றது.



முன்னர், நாட்டை வடக்கு, தெற்கு என பிரித்த ஆட்சியாளர்கள் தற்போது தங்களின் அரசியல் எதிர்காலத்துக்காக சமூகங்கள் மத்தியில் பிளவை உருவாக்க முயல்கின்றனர். மக்கள் இவர்களின் நோக்கங்களுக்கு பலியாகக்கூடாது - என்றார். (ஐ)

# விமல் வீரவன்ஸவுக்கு நீதிமன்று பிடியாணை

கொழும்பு, ஜூன் 20

**பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவை கைது செய்யுமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.**

2016ஆம் ஆண்டு கொழும்பில் உள்ள ஐ. நா. பணிமனை முன்பாக நடத்திய போராட்டம் தொடர்பான வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, நீதிமன்றில் முற்படத் தவறியமைக்காக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் அவருக்கு பிடியாணை பிறப்பித்துள்ளது.

அத்துடன், இந்த வழக்கை செப்ரெம்பர் 11ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட். அல் ஹுஸைன் இலங்கைக்கு சென்றபோது, கொழும்பு, தும்முல்லையில் உள்ள ஐக்கிய நாடுகள் பணிமனையை சுற்றி வீதிகளை



மறித்து பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரித்தானிய தூதுவராக ரோஹித போகொல்லாகம

கொழும்பு, ஜூன் 20

முன்னாள் அமைச்சர் ரோஹித போகொல்லாகம பிரித்தானியாவுக்கான இலங்கை தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி பிரித்தானியாவுக்கான இலங்கையின் தூதுவராக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்



ரோஹித போகொல்லாகம நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கு புதிய முறைமை தயாரிக்க திட்டம்

கொழும்பு, ஜூன் 20

சர்வதேச பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகுதிகள் தொடர்பாக புதிய முறைமை ஒன்றை தயாரிக்க கல்விக்கான துறைசார் மேற்பார்வைக் குழு தயாராகி வருகிறது.

சுமார் 360 சர்வதேச பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கல்வி அமைச்சிடம் இருந்து அறிக்கை ஒன்றையும் குழு கோரியுள்ளது.

குறிப்பாக, ஆசிரியர் ஆட்சேர்ப்பில் தற்போது தகைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதில்லை எனவும் இந்த நிலைமை சரி செய்யப்பட வேண்டும் எனவும் குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் வி. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்த பாடசாலைகளை கையாள்வதற்கும் அவற்றைக் கண்காணித்து ஒழுங்குபடுத்துவதற்கும் கல்வி அமைச்சில் விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற குழுவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியார் பயிற்சி வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான அமைப்பைத் தயாரிப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் குழு அமைச்சிடம் கேட்டுள்ளது. அந்த ஆசிரியர்களை முறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இக்குழு வலியுறுத்தியுள்ளது. (ஐ)

## எல்லை நிர்ணய குழுவின் அறிக்கைக்கு பெரும்பான்மையான கட்சிகள் எதிர்ப்பு

### உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சு

கொழும்பு, ஜூன் 20

தேசிய எல்லை நிர்ணய குழுவின் இடைக்கால அறிக்கைக்கு பெருமளவான கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை வெவ்வேறாகக் காணப்பட்ட பல தொகுதிகளை இணைத்து ஒரு தொகுதியாக்குவதற்கான யோசனை குறித்த அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ளது. இதனால், சில மக்கள் குழுக்களுக்கு அநீதி இழைக்கப்படும் என்பதால் கட்சிகள் அதனை ஏற்க மறுத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை புதிய முறைமைக்கு பதிலாக பழைய விருப்பு வாக்கு முறைமையிலேயே நடத்துவதற்கு பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் விருப்பம் தெரிவித்துள்ளன என்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வேட்பாளர் பட்டியலில் இளைஞர் பிரதிநிதிகளுக்கு 25 வீதத்தை வழங்குவதற்கான பிரேரணைக்கு விரைவில் பாராளுமன்ற அங்கீகாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சட்டத்தரணி சாந்தா காலமானார்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவியும் முதல் தமிழ் பெண் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாந்தா அபிமன்னசிங்கம் (வயது -77) நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

சாந்தா அபிமன்னசிங்கம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வடக்கு மாகாணத்துககான தலைவராகவும் யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவியாக நீண்டகாலம் பணியாற்றியுள்ளார்.



இவர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீதிமன்றங்களின் மேம்படுத்தல்களிலும் சட்டத்தரணிகளின் நலன்களிலும் அக்கறையுடன் செயல்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையில் பயங்கரவாத சட்டம் தவறான முறையில் பயன்படுகிறது

### அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்

கொழும்பு, ஜூன் 20

இலங்கையில் பயங்கரவாத தடை சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப்படுகிறது என்று சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் மைக் லெவின், மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு அமைவாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் தொடரும் பயங்கரவாத தடை சட்டத்தின் பிரயோகம் மற்றும் அதன் கீழான மனித உரிமைகள் மீறல் குறித்து உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தொடர்ச்சியாக கரிசனைகள் வெளிப்படுத்தப்பட்டு வரும் நிலையிலேயே மைக் லெவின் தனது டுவிற்றர் பக்கத்தில் இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துடன், அண்மையில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் குறித்தும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத தடைச் சட்டமானது போராட்டக்காரர்களை அமைதிப்படுத்துவதற்கும் நபர்களை தன்னிச்சையாக தடுத்துவைப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. பயங்கரவாத தடை சட்டத்துக்குப் பதிலாக அரசாங்கத்தால் தற்போது முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமும் மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தல் விளைவிக்கக்கூடிய வகையிலேயே காணப்படுகிறது என்று தெரிவித்துள்ள அவர், எனவே அச்சட்டமூலம் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு அமைவாக மாற்றியமைக்கப்படுவது அவசியம் என்றும் கூறியுள்ளார். (ஐ)

## 'கொங்கிறீட்' தூண் விழுந்து ஊஞ்சல் ஆடிய சிறுமி மரணம்

கொழும்பு, ஜூன் 20

பாதுகாப்பற்று கட்டப்பட்ட கொங்கிறீட் தூணில் ஊஞ்சல் கட்டி ஆடிய சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தங்காலை - நெடோல்பிட்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சிறுமி தனது தந்தையுடன் வீட்டில் உள்ள கொங்கிறீட் கம்பத்தில் ஊஞ்சல் ஆடிய போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் சிறுமி உயிரிழந்ததுடன் தந்தையும் படுகாயமடைந்து தங்காலை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மாத்தறை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் தேவமினி என்ற 9 வயது சிறுமியே உயிரிழந்தார். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தங்காலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நயினை...

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் - புலம்பெயர் தேசங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானவர்கள் நேற்றைய திருவிழாவில் பங்கேற்றனர். ஆலயத்துக்கு செல்வதற்காக விசேட போக்குவரத்து மற்றும் படகு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்ததுடன், ஆலய சூழலில் குடிதண்ணீர் மற்றும் அன்னதான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

## கல்வியை...

வகுப்புகளுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கல்வியை இடை நடுவில் கைவிட்டு சென்றதால் அவர்களின் தனிப்பட்ட திறமைகளை வெளிக்காட்ட முடியாமலும் சமூகத்தில் பிரச்னைகளை தோற்றுவிக்கவும் அது வழிவகுக்கும். இது தொடர்பில் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் அறிக்கை பெற வேண்டியது கட்டாயமாகும். மாணவர்கள் இவ்வாறு விலகிச் செல்வதற்கான காரணம் என்ன? என்பதையும் கண்டறியவேண்டும்.

பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கு முறையான தொழில் பயிற்சி, வழிகாட்டல்கள் மற்றும் இலவச பயிற்சி நெறிகள் ஏற்பாடு செய்வதன் மூலம் அவர்களின் வளமான எதிர்காலத்துக்கு அது வழிவகுக்கும் - என்றார். (ஐ)

## இந்திய...

மருந்துப் பொருட்கள் நாட்டில் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, இந்த இரு வகை மருந்துகளின் தரத்தையும் மீள்பரிசீலனை செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேசமயம், இந்த மருந்துப் பொருட்களை பயன்படுத்திய பின்னர் நோயாளர்கள் உயிரிழந்தமை மற்றும் பல்வேறு விதமான பக்கவிளைவுகளை எதிர்கொண்டமை தொடர்பில் ஆராய்வதற்கு குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையிலேயே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மருந்துப் பொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டை மருந்துகளை இறக்குமதி செய்த நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை தொடர்பிலும் ஆராயப்படுகிறது என்றும் அமைச்சின் செயலர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## 29ஆம் திகதி...

மஃரிப் தொழுகையின் பின்னர் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இதன்போதே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## கடந்த...

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண தெரிவித்தார்.

பொலிஸ் தரவுகளுக்கு அமைவாக அவர் வெளியிட்ட தகவல்க ளின்படி,

கடந்த 18ஆம் திகதி வரை நாடு முழுவதும் 902 விபத்துகளில் மரணங்களும் ஆயிரத்து 856 விபத்துகளில் படுகாயங்களும் 3 ஆயிரத்து 951 விபத்துகளில் சிறு காயங்களும் 2 ஆயிரத்து 096 விபத்துகளில் சேதங்களும் பதிவாகியுள்ளன.

இந்த விபத்துகளுக்கு குடிபோதையில் வாகனங்களை செலுத்துதல், போதைப்பொருள் பாவனை என்பன முக்கிய காரணங்களாக இருந்துள்ளன. இவ்வாறான விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்க விசேட செயல்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளின் ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தால் ஆறு மாதம் முதல் ஒரு வருடம் வரை இடைநிறுத்தவும் சிறைத் தண்டனை விதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (ஐ)

## இலங்கைக்கு...

உடன்படிக்கைக்கு பின்னர் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாட்டுக் கான மிகப்பெரிய நிதி பங்களிப்பாக இது இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி...

மாநாடு நடைபெறும் இடத்துக்கு அருகே மாலை நடைபெற்றது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்த போராட்டங்கள் நடத்தப்பட்டன. போராட்டத்தில் பங்கேற்றவர்கள் "எமது தேசம் தமிழீழம், எமது தலைவர் பிரபாகரன், ரணிலே வெளியேறு" என்ற கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

உலகளாவிய ரீதியில் பழமைவாத, மற்றும் மைய - வலது கட்சித் தலைவர்களை இணைத்து பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் மார்கிரட் தட்சர் ஆரம்பித்த சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் 40ஆவது ஆண்டு விழாவில் நேற்றைய தினம் ஜனாதிபதி ரணில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய..

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்களின் பழியை ராஜபக்ஷக்கள் மீது சுமத்த ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். ஆகவே, குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணையை விரைவுபடுத்தி உண்மையை பகிரங்கப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம் - என்றும் கூறியுள்ளார்.

இரத்தினபுரி - எஹலியகொடையில் நேற்று முன்தினம் மாலை பொதுஜன பெரமுன கட்சியின் தொகுதி கூட்டம் நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ராஜபக்ஷக்கள்மீது போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து அரசியல் இலாபம் அடைவதை ஒரு தரப்பினர் பிரதான அரசியல் கொள்கையாகக் கொண்டுள்ளார்கள். 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் ராஜபக்ஷக்கள் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை.

ஏப்ரல் 21 குண்டு தாக்குதல் சம்பவத்தின் பழியை ராஜபக்ஷக்கள் மீது சுமத்த ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். ஆகவே, குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணையை விரைவுபடுத்தி நாட்டு மக்களுக்கு உண்மையை பகிரங்கப்படுத்தப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம்.

ராஜபக்ஷக்கள் நாட்டை அழித்து ஆட்சிக்கு வரவில்லை நாட்டைப் பாதுகாத்து ஆட்சிக்கு வந்தார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் எடுத்த ஒருசில தீர்மானங்களால் பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

பொருளாதார பாதிப்பை அரசாங்கத் துக்குள் இருந்தவர்கள் அரசியல் நெருக் கடியாக்கினார்கள். ஜனநாயகப் போராட்டம் என்று கூறிக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாத செயல்பாட்டை அழிப்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலை மையில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தி னோம். அரசியல் ரீதியில் நாங்கள் எடுத்த தீர்மானம் சிறந்தது என்பதை மக்கள் தற்போது விளங்கிக் கொண் டுள்ளார்கள். வெகுவிரைவில் புதிய அணியாக ஆட்சியைப் பொறுப் பேற்போம். ஆகவே, தேர்தலை விரை வாக நடத்துமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம் - என்றார். (ஐ)

# ஆளும், எதிர்த் தரப்புகளுடன் பேசாமல் அரசியல் பிரச்னைக்கு தீர்வுதரமுடியாது!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூன் 20

"நிறைவேற்று அதிகாரம் இருக்கின்றது என்பதற்காக நான் ஆளும் தரப்பு பங்காளிகளுடனும் எதிரணியிலுள்ள கட்சிகளுடனும் கலந்து பேசாமல் எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாது. அரசியல் தீர்வு விவகாரம் சுலபமான விடயம் அல்ல. அதை ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது வேறு எவரோ எடுத்தவுடன் வழங்க முடியாது." என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன் பேச்சுகள் தொடர்பாக நம்பிக்கையீனத்தை வெளியிட்டமை தொடர்பிலேயே ஜனாதிபதி மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

மேலும், "அரசியல் தீர்வு பேச்சு முன்னெடுக்கப்படும் நிலையில் ஆளும் தரப்பிலுள்ள கட்சிகளிடத்திலிருந்தும் எதிரணியிலுள்ள கட்சிகளில் இருந்தும் எதிர்ப்புகள் வரும். தற்போதைய பாராளுமன்றம் ஆளும் தரப்பிலும் எதிரணியிலும் பல கட்சிகளைக் கொண்டுள்ளது.

அரசியல் தீர்வு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த மூவின மக்களுக்கும் உரியது. எனவே, தீர்வு விவகாரப் பேச்சு வெற்றியடையும் என்று நம்புகின்றேன். சகல கட்சிகளுடனும் நாடாளுமன்றத்துக்குள்ளும் பேசி வெளியிலும் பேசி அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை விரைந்து வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன்." - என்றும் ஜனாதிபதி சொன்னார். (ஐ)

# கடன் மறுசீரமைப்பு விடயத்தில் ஒரே குரலில் இணையுங்கள்!

## சஜித் பிரேமதாஸ அழைப்பு

கொழும்பு, ஜூன் 20



தங்கள் சொந்த எண்ணங்களின் பிரகாரம் அவசரப்பட்டு சர்வதேச நாணய நிதியத்தால் சொல்லப்படுவதை ஒத்துக் கொள்ளும் சூழ்நிலையில் நாட்டுக்கு நடந்த அழிவுகள் கண்ணெதிரே தெரிவதாகவும் இப்போதாவது அவசர முடிவுகள் எடுக்காமல் எதிர்க்கட்சிகளுக்கு அனைத்து உண்மைகளையும் வெளிப்படுத்தி எதிர்க்கட்சியும் அரசாங்கமும் ஒரே குரலில் தேசிய கடன் மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்க ஒன்றிணையுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டார்.

கட்சி, நிறம், மதம், சாதி வேறுபாடின்றி பாராளுமன்றத்திலுள்ள 225 உறுப்பினர்களும் ஒரே குரலில் எதிர்ப்பை வெளிப்படுத்தும்பட்சத்தில் சர்வதேச நாணய நிதியத்துக்குத் தெளிவான தாக்கத்தை ஏற்படுத்தினால் ஊழியர் சேம நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை மற்றும் ஓய்வூதியம் உட்பட அனைவரின் வைப்புத் தொகைகளையும் பாதுகாக்க முடியும். இதற்கு எதிர்க்கட்சி என்ற ரீதியில் பூரண ஆதரவை வழங்குவோம் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று திங்கட்கிழமை கூடிய எதிர்க் கட்சி ஒன்றியத்தின் செயல்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

சரியானதற்கு சரி என்று கூறினாலும் தவறானவற்றுக்கு உடன்படப்போவதில்லை எனவும் பல்வேறு தந்திர மந்திரங்களில் சிக்கிக் கொள்ளாமல் தாம் எடுத்த முட்டாள்தனமான முடிவுகளை அவ்வாறே ஒப்புக் கொண்டு புதிய வழியில் முன்னோக்கிச் செல்ல ஒன்றுபடுமாறும் இந்நாட்டு மக்களின் வைப்புத் தொகைகளின் பெறுமதியைப் பாதுகாக்கத் தயாராக இருந்தாலும் அரசாங்கம் சொல்வதெற்கெல்லாம் கை தூக்கத் தயாராக இல்லை என்றும் அவர் கூறினார்.

தவிர, சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தத்துடன் தொடர்பான தரவுகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு எதிர்க் கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தியால் அப்போதைய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் அவர் அதனை வழங்கவில்லை எனவும் ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தால், சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொள்ளவுள்ள ஒப்பந்தம் மக்கள் தரப்பில் வலுப்படுத்தி முற்போக்காக செயல்படுத்தும் சாத்தியம் இருந்தும்,அது நடக்கவில்லை எனவும், இந்த தரவுகள் நாட்டிற்கும் பாராளுமன்றத்திற்கும் தெரியாமல் மறைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியும் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதை ஏற்றுக் கொண்டாலும் இந்த உடன்படிக்கைகளை வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதன் மூலம் நடைமுறைப்படுத்த முடியும் என ஐக்கிய மக்கள் சக்தி நம்பினாலும், மத்திய வங்கியின் ஆளுநரும், நிதி இராஜாங்க அமைச்சரும் உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்கப் போவதில்லை எனத் தெரிவித்திருந்த போதிலும், உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதாக ஜனாதிபதி கூறியமை ஆச்சரியமளிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு நேரத்தில் ஒரு விடயத்தையும் மற்றொரு நேரத்தில் இன்னொரு விடயத்தையும் கூறி ஒன்றுக்கொன்று பரஸ்பர முரண்பாடான கருத்துக்களை கூறுவதில் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையும் அற்றுப்போவதாக குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர், உலகின் பெரும்பாலான நாடுகள் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளாது சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தங்களுக்குச் செல்லலாம் என்பதிலும் இலங்கையால் இவ்வாறானதொரு ஒப்பந்தத்திற்குச் செல்ல முடியாது என்பதற்குமிடையில் ஏதே மறைந்துள்ளது.

இந்த உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் அரசாங்கம் மக்களைப் பற்றியோ அல்லது பொதுநல வைப்புத்தொகைகள் மற்றும் பணிக்கொடை வைப்புத் தொகைகள் பற்றியோ சிந்திக்கவில்லை. முற்போக்கான எதிர்க்கட்சியாக இவ்வாறான தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார்.(ஐ)

ஈழநாடு
Eelanadu

# தேர்தலுக்கான தேவை தற்போது எழுந்துள்ளது

## தேர்தல் ஆணைக்குழு தலைவர்



கொழும்பு, ஜூன் 20

**தற்போது தேர்தல் ஒன்றுக்கான தேவை எழுந்துள்ளது என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.**

அண்மைக் காலமாக இடம்பெற்ற சம்பவங்களின் பின்னர் மக்கள் விருப்பத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

அதற்கமைய, தமது பிரதிநிதிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் எழுந் துள்ள புதிய விருப்பத்துக்கு அமைய, ஏதேனுமொரு தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறு செயல்படவில்லையா யின், சமூகத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் மக்களின் விருப் பங்கள் கொந்தளிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படலாம்.

நாடு தற்போது வழமைக்கு திரும்ப ஆரம்பித்துள்ள நிலையில், தேர்தலுக்கான தேவை காணப்படுமாயின், அதற்கான நிதியை பாராளுமன்றம் ஊடாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இதனிடையே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலுக்கு தயாராகவுள்ளது. அதற்கு தேவையான ஆரம்பக்கட்ட செயல்பாடுகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், அதிகாரிகளை பயிற்றுவித்தல், வாக்களிப்பு நிலையங்களை தயாரித்தல் உள்ளிட்ட செயல்பாடுகள் தற்போது நிறைவடைந்துள்ளன. அடுத்த தேர்தலின் போது வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படுவமாயின் அதற்காக செலவு செய்யும் பணம் வீணாகும் - என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவித்தார். (ஐ)



# இந்திய நீர்மூழ்கி கப்பல் நேற்று இலங்கை வந்தது

கொழும்பு, ஜூன் 20

இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஐ. என். எஸ். வாகிர் நீர்மூழ்கிக் கப்பல் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கடற்படை சம்பிரதாயங்களுக்கு அமைய குறித்த கப்பலுக்கு வரவேற்பளிக்கப்பட்டதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

வாகிர் நீர்மூழ்கி கப்பல் 67.5 மீற்றர் நீளமுடையது. 60 ஊழியர்களுடன் நாட்டை வந்தடைந்துள்ள குறித்த கப்பலின் கட்டளைத் தளபதியாக கொமாண்டர் எஸ். திவாகர் செயற்படுகின்றார்.

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நடைபெற வுள்ள யோகா நிகழ்வொன்றில் இலங்கை மற்றும் இந்திய கடற்படை உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ள னர்.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் நாளை மறுதினம் நாட்டி லிருந்து புறப்படும் என இலங்கை கடற்படை தெரிவித் துள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் பாகிஸ்தானுக்கு சொந்தமான போர் கப்பல் ஒன்றும் இலங்கை வந்து தரித்து நிற்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தொல்பொருள் சின்னங்கள் குறித்து சுயாதீனமான ஆய்வுகள் அவசியம்!

## கஜேந்திரன் எம். பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 20

வடக்கு, கிழக்கு தொல்பொருள் சின்னங்கள் குறித்து தமிழ் மற்றும் சர்வதேச தொல்பொருள் நிபுணர்கள் சுயாதீன ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப் பினர் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர் காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் உள்ள தொல் பொருள் சின்னங்களை, சிங்கள மயமாக்கல் செயல்பாடு களுக்காக பயன்படுத்தப்படுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

வடக்கு - கிழக்கிலுள்ள தொல்பொருள் சின்னங்க ளின் வரலாறு தொடர்பாக தமிழ் தொல்பொருள் நிபுணர்களினதும் சுயாதீன சர்வதேச நிபுணர்களினதும் பங்குபற்றுதலுடன் ஆய்வுகளை மேற்கொள்ள வேண் டும். அத்துடன் எல்லாவல மேதனந்த தேரர் ஓர் இன வாதி என்றும் கூறியுள்ளார். (ஐ)

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கமாக செயல்படுவோம்

## பொதுஜன பெரமுன கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் ஜனநாயகம், தனிமனித சுதந்திரம் ஆகிய வற்றை உறுதிப்படுத்துவதற்காகவே ரணில் விக்கிரமசிங் கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். ஆகவே, ஜனா திபதி மற்றும் அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கமாக செயல்படுவோம். பதவிகாலம் நிறைவடைவதற்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப் படாது என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் விரிசல் நிலை தோற்றம் பெற்றுள்ளது. வெகுவிரைவில் பாராளுமன் றம் கலைக்கப்படும் என ஒருசில சமூக வலைத்தளங்களி லும் தேசிய ஊடகங்களிலும் வெளியானசெய்தி அடிப் படையற்றது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதில் எமது அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ உட்பட பொது ஜன பெரமுன தலைமையிலான அமைச்சரவை தோல்வியடைந்ததை அரசாங்கத்துக்குள் இருந்தவர்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு பெரும் அரசியல் நெருக்கடியை தோற்றுவித்தார்கள்.

பொருளாதார நெருக்கடி பெரும் அரசியல் முரண் பாடுகளை ஏற்படுத்தியது. இதனை ஒரு தரப்பினர் பயங்கரவாத செயல்பாடுகளுக்காக மாற்றியமைத் தார்கள். கடந்த ஆண்டு நாட்டில் சட்டம்,ஒழுங்கு முறையாக செயல்படுத்தப்படவில்லை. யார் வேண்டு மானாலும் அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு தீ வைக்க லாம் என்ற மோசமான நிலை காணப்பட்டது. சட்டம் ஒழுங்கை முறையாக செயற்படுத்தாமல் பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண முடியாது.

ஜனாதிபதிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் முரண்பாடு என குறிப்பிடப்படுவது அடிப் படையற்றது - என்றார். (ஐ)


## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 06 . 1937



இறப்பு 16 . 06 . 2023

திருமதி
**பாறுப்பிள்ளை சின்னத்தம்பி**

யாழ். எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாறுப்பிள்ளை சின்னத் தம்பி அவர்கள் 16.06.2023 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பொன்னு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும். லங்கா, பபா(மலர்), வசந்தா, சிவநேசன், றஞ்சனா, காலஞ் சென்ற சிவபதி(கிளி), சுகந்திரா(குவேனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லோகநாதன், உதயகுமார், லோகசௌந்திரன், வினோதினி, விமலேஸ்வரன், சிவராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்ற தம்பையா(விசுவு) அவர்களின் பாசமிகு சகோதரியும்,பொன்னம்மா(பூவர்) அவர்களின் அன்பு மைத்துனியும்,சுஜாந்தன், மயூ- கவின், நர்மதா - மதுக்ஷன், அருட்சி - டினேக்ஷ், மீனு, ஜாழிதா - வினோஜன், தூரி, சிபி, லிதுனா, சாது, சஜன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், அப்பம்மாவும், திரன், ஆதிக், அனிக்ஷ், றெயன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 06 . 1941



இறப்பு 15 . 06 . 2023

திருமதி
**கிருஷ்ணபிள்ளை இராசம்மா**

யாழ். நயினாதீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப் பிடமாகவும், ஜேர்மனியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை இராசம்மா அவர்கள் 15.06.2023 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- நாகம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர் களான கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமக ளும்,யாழ். கொட்டடியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை அவர் களின் அன்பு மனைவியும், ருக்மணிதேவி(இலங்கை), கிருக்ஷ்ணானந்தன்(நோர்வே), கிருஷ்ணகுமார்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், சிவராஜா, பஞ்சலிங்கம், பரமேஸ்வரி, பரம லிங்கம், அருளானந்தம், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறிதரன்(இலங்கை), மகேஸ்வரி(ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, வல்லிபுரம், அன்ன லட்சுமி, கலாமணி, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற மனோகரன், சரோஜினி (சறோ- நோர்வே), இரஞ்சிதரஜினி (சூட்டி-ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும்,உதயகுமார்(ஜேர்மனி), சூரியகுமார், ராஜ் குமார், அனுசியா, ஆக்ஷா, ரதிகலா, பிரதீப் ராஜ், அனுக்ஷா, சபிதா, நிரோக்ஷன், வைக்ஷ்ணவன், சதீஷ்குமார் (நோர்வே), றக்சனா, லக்சனா, அபிசாந், மிதுர்சன்(ஜேர்மனி) ஆகியோ ரின் அன்பு அப்பத்தாவும், சஞ்சனா, சச்சின், சஞ்ஜேய், கிக்ஷாணி, டிவேர்க்ஷா, லிக்சா, சக்ஷ்வினி, சக்ஷ்வின், ஹயான், மித்ரன், க்ஷாரணிக்கா, க்ஷாயான்(நோர்வே) ஆகி யோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்.**


*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*